Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JULY 3, 2021

சனிக்கிழமை ஜூலை 03, 2021 | ஒளி: 07 கதிர்: 38 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | free

தேர்தல் சீர்திருத்த அணுகலில்

## ‘அனைத்து சிறு கட்சிகளையும் நாங்கள் இணைப்போம்’



தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் உடன்படும் அனைத்து சிறு கட்சிகளும் இணைத்துக்கொள்ளப்படுமெனத் தெரிவித்த தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி, எவரையும் தவிர்த்து விட்டுப் பயணிக்கும் எந்தவிதத் தேவையும் கிடையாது எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “ஆளும் தரப்பினர் ‘இறப்பர் சீல்’கள்”



இந்த அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ‘இறப்பர் சீல்’களாக மாற்றப்பட்டுள்ளனர் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

“நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை இனங்காணாது அமைச்சுப் பொறுப்புகளை பிரித்துக் கொடுப்பதன் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது” என்றார்.

“பாராளுமன்றத்துக்கு யார் வந்தாலும், யாருக்கு அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்பட்டாலும் பிரச்சினை அவ்வாறே இருக்கும். அமைச்சர்களை விடவும் ஆகக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டிருந்த தலைவராகவே பசில் ராஜபக்ஷ இருந்தார்” என தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அடுத்து என்ன நடக்கும்?

# திங்கள் தெரியும்

**முடக்கத்துக்கு அரசாங்கம் செல்லாது. மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை தொடரும்**

**மேல்மாகாண விசேட வழிகாட்டி, நாடுமுழுவதும் பொதுவான வழிகாட்டியாக அமலுக்கு வரலாம்**

அடுத்த கட்டம் தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை (05) முக்கிய அறிவிப்பொன்றை அரசாங்கம் விடுக்கவுள்ளதென தகவல்கள் தெரிவிக்கின்றன.

அது தொடர்பில், பல்வேறு மட்டத்தினருடன் ஆலோசனைகளை முன்னெடுத்து வருகின்றது என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மீண்டும் பயணக் கட்டுப்பாடுகளா? இன்றேல் பயணத்தடையா? அல்லது முழுமையான முடக்கமா? என்பது தொடர்பில் அன்றையதினமே உத்தியோகபூர்வமான அறிவிப்பு வெளியாகுமென அறியமுடிகின்றது. நாட்டில் கொரோனா தொற்றின் வேகமும், திரிபடைந்த டெல்டா தொற்றின் வேகமும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், அடுத்த கட்டம் தொடர்பில் அதிரடியான தீர்மானங்களை எடுக்கவேண்டிய நிலைமைக்குள் அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## திருமணத்துக்கு மறுத்தார் சிறுமி; சரமாரியாக வெட்டினான் இளைஞன்

### இளைஞனுக்கு வலை; சிறுமிக்கு சத்திரசிகிச்சை

காஞ்சன ஆரியதாச



பாட்டியுடன் வசிக்கும் 16 வயதான சிறுமி, தனது திருமண யோசனையை நிராகரித்ததை அடுத்து கடுமையாகக் கோபமடைந்த 26 வயதான இளைஞன், அச்சிறுமியை சரமாரியாக வெட்டிய கொடூரமான சம்பவமொன்று, தம்புள்ளையில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## ‘உயிர் அச்சுறுத்தல் ஏற்படின் ஜனாதிபதியே பொறுப்பு’

துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில், நாம் சர்வதேசத்துக்குச் சென்றால், நாட்டு மக்கள் தான் பாதிப்பை எதிர்நோக்க நேரிடும். ஆனால், ஆட்சியாளர்களுக்கு அது புரியவில்லையெனத் தெரிவித்த, முன்னாள் அமைச்சரான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மனைவி சுமனா பிரேமசந்திர, இந்த விடுதலை தொடர்பில், விளக்கம் கோரி சட்டத்தரணிகள் சங்கத்தாலும் தனது புதல்வி ஹிருணிகாவாலும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு இதுவரை பதிலில்லை என்றார்.

“ஆக குறைந்தது, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்காவது ஜனாதிபதி விரைவில் பதில் அனுப்புவார் என நினைக்கிறேன்” என்றார். அவரது இல்லத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், துமிந்தவின் விடுதலையின் பின்னர், பல சமூக அமைப்புகள், மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகள் என்பன எம்முடன் கதைத்து, அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன செய்யப் போகிறீர்கள் என வினவுகின்றனர் என்றார்.

தொடர்ச்சி P2



# வேண்டாம்...

கொழும்பு-02, ஸ்டுவர்ட் புர வேகந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ், நிர்மாணிக்கப்பட்ட மாடிவீட்டுத்திட்டத்தின் தற்போதைய நிலைமையை இந்தப் புகைப்படம் சித்திரிக்கிறது. இந்த ஆபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றுமாறு, ஜூலை 1ஆம் திகதி அம்மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். (படம்: கித்சிறி டி மெல்)



## பணத்தை வெளியே அனுப்ப கட்டுப்பாடு

இலங்கையிலிருந்து வெளிநாட்டு நாணயம் வெளியேறுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் புதிய வழிமுறைகளை உள்ளடக்கிய வர்த்தகமானி அறிவித்தலை நிதி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், வெளிநாட்டவர்கள், இலங்கையில் கொண்டுள்ள சொத்துகள், (அசையும், அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துகள் அடங்கலாக) தேறிய நிதியங்களாக இருக்கின்ற, உடனடி குடும்ப உறுப்பினரிடமிருந்து பண அன்பளிப்புகளாகப் பெறப்பட்ட நிதியங்களிலிருந்து புலம்பெயர் முற்கொடுப்பனவின் கீழ் நிதியங்களை தாம் வதியும் நாடுகளுக்கு அனுப்புவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 27 நாள் காலக்கெடு விதித்தார் ஜனாதிபதி



மேல் மாகாணத்தில் உள்ள 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், ஜூலை 31ஆம் திகதிக்கு முன்னர் தடுப்பூசிகளை வழங்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுகாதாரத் துறைக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து, கொவிட்-19 ஒழிப்பு விசேட குழுவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (02) இடம்பெற்ற சந்திப்பின்போதே, ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த 60 சதவீதமானவர்களுக்கும் கம்பஹா மாவட்டத்தில் 47 சதவீதமானவர்களுக்கும், களுத்துறை மாவட்டத்தில் 34 சதவீதமானவர்களுக்கும் முதலாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மீண்டும் ‘மெண்டிஸ்’

மதுபானங்களை தயாரிப்பதற்காக மெண்டிஸ் நிறுவனத்துக்கு கலால் திணைக்களம் மீண்டும் அனுமதியளித்துள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல மில்லியன் ரூபாய் வரி மோசடி செய்ததன் காரணமாக, மதுபானங்களை உற்பத்தி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## ‘நின்று, அமர்ந்திருந்து ‘கள்’ அருந்த முடியாது’

என்.ராஜ், எம்.றொசாந்த்



வட மாகாணத்திலுள்ள சகல கள்ளுத் தவறணைகளும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, நேற்று (02) முதல் திறக்கப்பட்டுள்ளன. ஆனால், தவறணைகளில் நின்றுகொண்டோ அல்லது அமர்ந்திருந்தவாறோ, கள் அருந்த முடியாது என பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சேருவில பிரதேச சபையில்

## ரிஷாடின் ஆதரவில் மலர்ந்தது மொட்டு

### சபையை இழந்தது ஐ.தே.க

ஒலுமுதீன் கியாஸ்



திருகோணமலை மாவட்டத்தின் ஐக்கிய தேசிய கட்சியின் கீழிருந்த சேருவில பிரதேச சபையின் அதிகாரத்தை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, நேற்று (02) கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ச்சி P2

## உள்ளே


03. மடுமாதாவின் ஆடித் திருவிழா

03. கௌதாரியை கௌவிய சீனா

04. இயேசுவும் மன்னிக்கார்

04. கிணறு குடித்த ‘சிறுநீர்’

05. வெடித்துச் சிதறிய BIO- BUBBLE

05. ‘பாவம்’ பாண்டி ஆறு

07. நாவை நீட்டக் கூடாது

07. கல்வி ஒருவருக்கு இல்லையெனில்...

08. கசந்த ‘முத்தம்’

08. சொல்ல மறந்த கதை


## ‘ராஜபக்ஷர்களுக்கு எதிரான காற்று புயலாக மாறும்’



நிதி, பொருளாதாரம் அல்லது வேறு எந்த அமைச்சுப் பதவியை பசில் ராஜபக்ஷவுக்குக் கொடுத்தாலும் இந்த நெருக்கடியிலிருந்து மீண்டு வர முடியாதெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க, இந்த நெருக்கடி நிலைக்கு பிரதான காரண கர்த்தாவே அவர்தான் என்றார்.

தொடர்ச்சி P2

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு பயணித்த

## 3 பஸ்கள் சிக்கின: மூவருக்கு கொரோனா

பேரின்பராஜா சபேஷ்



மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை மீறி கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிவந்த மூன்று சொகுசு பஸ்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சமரகோன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “ஆளும் தரப்பினர் ‘இறப்பர் சீல்’கள்”

குருநாகல், கல்கமுவ பிரதேசத்தில் ஊடகவியலாளர்கள் நேற்று முன்தினம் (01) சந்தித்துக் கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## மீண்டும் ‘மெண்டிஸ்’

எனினும், கடுமையான நிபந்தனைகளின் கீழ், மீண்டும் உற்பத்தி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பிணைமுறி மோசடி தொடர்பில் பர்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் அதன் பொது முகாமையாளர் அர்ஜூன் அலோசியஸின் உரிமத்துடன் மெண்டிஸ் நிறுவனம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பணத்தை வெளியே அனுப்ப கட்டுப்பாடு

ஏற்கெனவே புலம்பெயர் முற்கொடுப்பனவைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்களால் மூலதனக் கொடுக்கல் வாங்கல் கணக்குகளினூடாக புலம்பெயர் முற்கொடுப்பனவின் கீழ் நிதியங்களை தமது நாட்டுக்கு திருப்பியனுப்புவதை ஆகக்கூடியது 10,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு நிகரான வேறெந்த நாட்டு பணத்துக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கட்டளை செயலிலுள்ள காலப்பகுதியில் புலம்பெயர் முற்கொடுப்பனவை முதற் தடவையாக கோரும் புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமை வாய்ந்த தொகையை உயர்ந்தபட்சம் 30,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு நிகரான வேறெந்த நாட்டுப் பணத்துக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் திரண்ட வருமானத்தை (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம், பணிக்கொடை மற்றும் ஒய்வூதியங்கள் அல்லது வேறேதும் ஓய்வு நலன்கள் அடங்கலாக) தமது நாட்டுக்கு அனுப்புவதற்கான தொகை உயர்ந்தபட்சம் 30,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு நிகரான வேறெந்த நாட்டு பணத்துக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் தற்காலிகமாக வசிக்கும் நபரொருவரால் தனிப்பட்ட ரீதியில் வெளிநாட்டில் வசிக்கும் ஒருவருக்கு அனுப்பக்கூடிய உச்ச தொகை 20,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு நிகரான வேறெந்த நாட்டு பணத்துக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடொன்றில் தற்காலிக விசாவின் கீழ் வசிப்பதற்கு செல்ல எதிர்பார்க்கும் நபர் கொண்டு செல்லக்கூடிய தொகை உயர்ந்தபட்சம் 10,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு நிகரான வேறெந்த நாட்டு பணத்துக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் தொடர்பிலும், அவற்றுக்கு ஏற்புடைய காரணிகள் தவிர்த்து, ஏனைய வழிமுறைகளில் வெளிநாட்டுப் பணத்தை அனுப்புவதற்கும் மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விதிமுறைகள் ஆறு மாத காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் எனவும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘நின்று, அமர்ந்திருந்து ‘கள்’ அருந்த முடியாது’

பனை அபிவிருத்தி சபையின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், மேற்கண்டவாறு தெரிவித்த அவர், தவறணைகளிலும் போத்தல்களில் அடைத்தே கள்ளை விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றார்.

கொரோனா காரணமாக சகல கள்ளுத் தவறணைகளும் மூடப்பட்டிருந்தன. இதனால், கள் விநியோகமும் பாதிக்கப்பட்டிருந்தது எனத் தெரிவித்த அவர், மதுவரித் திணைக்களத்தால் விசேட அனுமதி தற்போது வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## ‘ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான காற்று புயலாக மாறும்’

“தனது தாய்நாட்டுக்கு ஏப்ரல் மாதம் சென்ற பசில் ராஜபக்‌ஷ, தற்போது இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளார். அவர், அவரது தாய் நாட்டுக்குப் போவதற்கு முன்னர், இலங்கையில் பொருளாதாரம் தொடர்பான குழுவின் பிரதானியாவார். அவர் எந்தவொரு தொடர்பும் இல்லாமல் அங்கு போய் இருக்கவில்லையே, அவர் தான் பொருளாதாரத்தை வழிநடத்தினார்” என்றார்.

கொழும்பில் நேற்று (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், அப்போது செய்ய முடியாததையா இப்போது செய்யப் போகிறார் எனக் கேள்வி எழுப்பினார். தனது தாய்நாட்டுக்குச் சென்ற இந்த ஒன்றரை மாதங்களில் அவருக்கு விசேட மூளையேதும் வளர்ந்துவிட்டதா எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

தேர்தல் மேடையில் கோட்டாபய ராஜபக்‌ஷவை பிடல் கஸ்ட்ரோ, காமீர் மொஹமட், ஸ்ரீ நேரு, துட்டுகெமுன, அனகாரிக தர்மபால என்றனர். இப்போது அவையெல்லாம் புஸ்வானமாகி போனதா என்றும் வினவினார்.

ராஜபக்‌ஷர்களே இந்த நாட்டின் பெரிய சாபம். சேற்றில் இருக்கும் அவர்கள் குதிக்க குதிக்க சேறுதான் அதிகரிக்குமே தவிர, வேறு ஒன்றுமே நடக்கப்போவதில்லை. இப்போது நாட்டில் ராஜபக்‌ஷர்கள் எதிர்ப்பு காற்று உருவாகியுள்ளது. அது எதிர்காலத்தில் புயலாக உருவாகும். இப்போது பாரிய மரங்களாக இருப்பவர்கள் எல்லாம் அந்தப் புயலில் காணாமல் போய்விடுவர் என்றார்.

# திங்கள் தெரியும்

எடுக்கவேண்டிய நிலைமைக்குள் அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

பயணத்தடை நீக்கப்பட்டதன் பின்னர், விசேட சுகாதார வழிகாட்டிகள் விடுக்கப்பட்டன. அத்துடன், மேல் மாகாணத்துக்கு மட்டும் மற்றுமொரு விசேட வழிகாட்டி விடுக்கப்பட்டது. இவ்விரண்டையும் திருத்தி, நாடளாவிய ரீதியில் பொதுவாக அமுல்படுத்தக் கூடிய வழிகாட்டியொன்றும் அன்றையதினம் விடுக்கப்படவுள்ளது என சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீண்டுமொரு முழு முடக்கத்துக்கு அரசாங்கம் செல்லாதெனவும், மாகாணங்களுக்கு இடையில் தற்போதும் முன்னெடுக்கப்படும் பயணக்கட்டுப்பாடுகளை அவ்வாறே பேணிக்கொண்டு, இறுக்கமான நடைமுறையை பின்பற்றுவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அறியமுடிகின்றது.

ஏககாலத்தில், கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளும் செயற்பாட்டை துரிதப்படுத்துவது தொடர்பிலான ஆலோசனைகளையும் உரியதரப்பினருக்கு உயர்மட்டத்தினர் வழங்கியுள்ளனர். எவ்வாறெனினும், அடுத்தக்கட்ட நடவடிக்கை தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை புதிய அறிவிப்பொன்று வெளியாகும் என உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ‘உயிர் அச்சுறுத்தல் ஏற்படின் ஜனாதிபதியே பொறுப்பு’

அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து கொஞ்சம் நாம் சிந்திக்கின்றோம். சில சம்பவங்களால் நாட்டுக்கு சர்வதேசத்தில் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், நாமும் இந்தச் சம்பவத்துடன் சர்வதேசத்துக்குச் சென்றால், இப்போது இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை, கடன் பிரச்சினைகளுக்கு மேலும் பாதிப்பு ஏற்படலாம் என்றார்.

அவ்வாறான பாதிப்பொன்று ஏற்படுமாயின் அதனை அனுபவிக்க போவது இலங்கை மக்களே தவிர, இலங்கை ஜனாதிபதியோ அவர் சார்ந்தவர்களோ இல்லை. எனவே, இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து நாம் சரியான முடிவுக்கு இதுவரை வரவில்லை என்றார்.

இதேவேளை, துமிந்தவின் பொது மன்னிப்புடன் தனக்கும் தனது மகளுக்கும் தன்னை சார்ந்தவர்களுக்கும் ஏதாவது அழுத்தங்கள், உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படாலம். அவ்வாறு ஏற்பட்டால் ஜனாதிபதியே அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்றார்.

## 27 நாள் காலக்கெடு விதித்தார் ஜனாதிபதி

இந்நிலையில், செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர், நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் அதிகளவு தடுப்பூசிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது வலியுறுத்திய ஜனாதிபதி, இரண்டாம் டோஸூக்குத் தேவையான அஸ்ட்ரா செனக்கா தடுப்பூசிகள் விரைவில் கிடைக்குமென்ற நம்பிக்கையையும் வெளியிட்டார்.

## 3 பஸ்கள் சிக்கின; மூவருக்கு கொரோனா

இந்த பஸ்களில் 49 பயணிகள் இருந்துள்ளனர். அவர்கள் அனைவரும் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதில், மூன்று பேருக்கு கொவிட்- 19 தொற்று உறுதி செய்யப்பட்டதாக ஏறாவூர்ப் பற்று பிரதேச சுகாதார வைத்தியதிகாரி இ.சிறிநாத் தெரிவித்தார்.

தும்பாலஞ்சோலை இராணுவ முகாம் சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கையை நேற்று வெள்ளிக்கிழமை (02) அதிகாலை மேற்கொண்டனர்.

இந்த பஸ்கள் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பிலிருந்து நான்கு மாகாணங்களைக் கடந்து கொழும்புக்குச் சென்று திரும்பிவரும் வழியில் பாதுகாப்புத் தரப்பினரால் சோதனையிடப்பட்டபோது, அவர்களிடம் விசேட அனுமதிப்பத்திரங்கள்

> **இந்த பஸ்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பிலிருந்து நான்கு மாகாணங்களைக் கடந்து கொழும்புக்குச் சென்று திரும்பிவரும் வழியில் பாதுகாப்புத் தரப்பினரால் சோதனையிடப்பட்டபோது, விசேட அனுமதிப்பத்திரங்கள் பாதை அனுமதியோ இருக்கவில்லை**

மற்றும் பாதை அனுமதியோ இருக்கவில்லையெனத் தெரியவந்துள்ளது.

இந்த பஸ்களின் சாரதிகள், நடத்துநர்களை நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட்- 19 தொற்று உறுதிசெய்யப்பட்ட பயணிகள் மூவரும் கரடியனாறு கொவிட்19 சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டனர். ஏனைய பயணிகள் அனைவரும் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## ரிஷாடின் ஆதரவில் மலர்ந்தது மொட்டு

கடந்த 7 மாதங்களாக இயங்காத நிலையிலிருந்த இந்த சபைக்கு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, புதிய தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான பிரேரணை, நேற்று (2) முன்வைக்கப்பட்டு, வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது.

இதன்போது, சபையின் புதிய தவிசாளராக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் டபிள்யூ.ஏ.ஜயசிரி, மேலதிக வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டார். இதனூடாக, இந்தச் சபையின் அதிகாரத்தை, ஐக்கிய தேசியக் கட்சி இழந்தது.

> **மொத்தம் 15 உறுப்பினர்களைத் கொண்ட சபையில் ஐ.தே. கட்சி 6 உறுப்பினர்களையும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 4 உறுப்பினர்களையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 3 உறுப்பினர்களையும் இலங்கை தமிழரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் கட்சி தலா ஓர் உறுப்பினரையும் கொண்டிருந்தன. வாக்கெடுப்பின் போது, புதிய தவிசாளருக்கு ஆதரவாக, 9 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன**

மொத்தம் 15 உறுப்பினர்களைத் கொண்ட இந்தச் சபையில் ஐ.தே. கட்சி 6 உறுப்பினர்களையும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 4 உறுப்பினர்களையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 3 உறுப்பினர்களையும் இலங்கை தமிழரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் கட்சி ஆகியன தலா ஓர் உறுப்பினரையும் கொண்டிருந்தன.

இன்றைய வாக்கெடுப்பின் போது, புதிய தவிசாளருக்கு ஆதரவாக, 9 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 4 உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 3 உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ஒருவரும், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன் தலைமையிலான

அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய வாக்கெடுப்பு இடம்பெற்ற வேளையில், திருகோணமலை மாவட்ட பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்து கோரள, சபையில் பிரசன்னமாகி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ‘அனைத்து சிறு கட்சிகளையும் நாங்கள் இணைப்போம்’

ஜே.வி.பி தலைமையகத்தில் நடைபெற்ற சந்திப்பு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டமையால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உட்பட ஏனைய கட்சிகள் அழைக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இன்றைய விகிதாசார முறைமை தொடர்ந்து பேணப்படுவதை, பொது நன்மை கருத்தை தாமும் ஆதரிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச எம்.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பியும் உறுதியளித்துள்ளனர் எனவும் மனோ கணேசன் எம்.பி கூறினார்.

சிறு கட்சிகளின் தேர்தல் சீர்திருத்த பேச்சுவார்த்தையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஏன் அழைக்கப்படவில்லை என்ற சர்ச்சை தொடர்பில் கருத்துக் கூறிய அவர் மேலும் கூறியுள்ளதாவது,

“தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் இன ரீதியான சிறு கட்சிகளும், அரசியல் ரீதியான சிறு கட்சிகளும் தேர்தல் சீர்திருத்தம் என்ற பொதுப் பிரச்சினையை கூட்டாகவே எதிர்கொள்ள வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

“இந்தப் பிரச்சினை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பியுடன் பேசுகின்ற அதேவேளை, நானும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் எம்.பியும், ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச எம்.பி உடனும் இது தொடர்பில் பேசியுள்ளோம்.

“இன்றைய விகிதாசார முறைமையே எமது பொது நிலைப்பாடு என நாம் அவருக்கு கூறியபோது, சஜித் பிரேமதாச எம்பி, தான் இன்றைய விகிதாசார முறைமைக்கு முழு ஆதரவு தருவதாக எமக்கு உறுதியளித்துள்ளார்.

“இது தொடர்பாக தமது கட்சி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும்பண்டார எம்.பியை அழைத்து அறிவுறுத்தல் வழங்கினார்.

“அதேபோல், தேர்தல் சீர்திருத்த பேச்சுவார்தை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுடனும் நான் நேரடியாக பலமுறை பேசியுள்ளேன்.

“வடக்கு மாகாணத்தில் புதிய கலப்பு முறைமை தமக்கு சாதகமாக அமையக்கூடிய வாய்ப்புகள் இருந்தாலும், நாடு முழுக்க சிதறி வாழும், தமிழ், முஸ்லிம் மக்களின் நன்மை கருதி தாமும் இன்றைய விகிதாசார முறைமை தொடர்ந்து பேணப்படுவதை ஆதரிக்க தயார் என கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் எம்.பி என்னிடம் உறுதியளித்துள்ளார்.

“தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களும் இத்தகைய நிலைப்பாட்டையே கொண்டுள்ளதாக நான் அறிந்துள்ளேன்” என்றார்.

## திருமணத்துக்கு மறுத்தார் சிறுமி; சரமாரியாக வெட்டினான் இளைஞன்

வெட்டுக்காயங்களுக்கு உள்ளான அச்சிறுமி, தம்புள்ளை வைத்தியசாலையில் சுமார் 10 மணித்தியாலங்கள் சத்திர கிசிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அச்சிறுமியின் வீட்டுக்கே சென்று, இவ்வாறு அட்டகாசம் புரிந்த இளைஞன், பிரதேசத்திலிருந்து தலைமறைவாகிவிட்டார் என்று தெரிவித்த பொலிஸார், இளைஞனைத் தேடி வலைவிரித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

தம்புள்ளை- பன்னம்பிட்டிய, மெனிக்தென்ன பிரதேசத்தில் வசிக்கும் சிறுமியே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார். மாத்தளை- மஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த அவ்விளைஞன், பதுளை பிரதேசத்தில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுபவர் என்றும் தெரியவருகின்றது.

கிராமத்திலுள்ள வீடொன்றில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்காக சிறுமியும் சென்றுள்ளார். அதன்போதே மேற்படி இளைஞன், தனது யோசனையை சிறுமியிடம் தெரிவித்துள்ளார். அந்த யோசனையை தனது பேத்தி, நிராகரித்துவிட்டார். இதனையடுத்தே, இவ்வாறு இடம்பெற்றது என, பொலிஸாரிடம் பாட்டி வாக்குமூலமளித்துள்ளார்.

# சீனா கௌவிய கௌதாரி

## வளங்களும் நலன்களும் பாதிப்பு





■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

இலங்கையின் வடபுலத்தில், மிகவும் தொன்மையான வரலாற்றுப் பெருமை மிக்க இடங்களில் ஒன்றாக பூநகரி பிரதேசம் காணப்படுகின்றது. அதாவது அங்காங்கே தொன்மையான கோவில்கள், கடல் மார்க்க போக்குவரத்துக்கான துறைமுகங்கள், கோட்டைகள் என்பன இதற்குச் சான்றாகும்.

இந்த வரலாற்றுச் சிறப்பும் கேந்திர முக்கியத்துவமும் மிக்க இப்பிரதேசத்தில், தற்போது சீனர்களின் ஆதிக்கம் காலுன்றி இருப்பதாகவும் இதன் முதற் கட்டமாக கடலட்டைப் பண்ணைஅமைக்கப்பட்டு உள்ளது என்றும் பல்வேறு தரப்புகளாலும் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

இந்தக் கடலட்டைப் பண்ணையானது, ஏற்கெனவே யாழ்ப்பாணம், அரியாலையில் சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட கடலட்டை உற்பத்திப் பண்ணையுடன் தொடர்புபட்டதா? அல்லது, இதற்குத் தனியாகப் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டதா போன்ற கேள்விகளும் இதன் அமைவிடம் தொடர்பிலும் பல்வேறு சர்ச்சைகள் காணப்படுகின்றன.

குறித்த, கடலட்டைப் பண்ணை, பூவரசம் தீவு என்ற சிறிய தீவிலேயே அமைந்துள்ளதாக ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தக் களப்பு பிரதேசத்தில் கௌதாரி முனைக்கும் யாழ்ப்பானத்துக்கும் இடைப்பட்ட கடல்பகுதியில் இரண்டு தீவுகளும் காணப்படுகின்றன.

இருந்தாலும், குறித்த கடலட்டைப் பண்ணையானது, ஏ-32 பூநகரி - சங்குப்பிட்டி பிரதான வீதியின் ஆலடி சந்தியில் இருந்து, மண்ணித்தலை சிவாலயத்துக்கு செல்லும் c-035 வீதியூடாக, ஏறத்தாழ 17 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கல்முனை பிரதேசத்தில் அமைந்துள்ளது. இது முழுமையாகவே, கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் ஆளுகைக்கு உட்பட்டதாகும்.

கௌதாரிமுனை, மண்ணித்தலை, கல்முனை போன்ற பகுதிகளில் இயற்கையாகவே மணல் திட்டுகள் காணப்படுவதால், இந்தப் பிரதேச போக்குவரத்துப் பாதைகள் யாவும், பயணம் செய்ய முடியாத பாதைகளாகவே காணப்படுகின்றன.

இதனால், இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள், தரை மார்க்கத் தொடர்புகளைக் கொண்ட இந்தக் கல்முனை போன்ற பகுதிகளுக்கு, அதிகமாக கடல் மார்க்க போக்குவரத்துகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது, கடலட்டைப் பண்ணை அமைந்துள்ள கல்முனைப் பகுதியில், தொன்மையான வழிபாட்டு முறைகளைக் கொண்ட ஐயனார் கோவில், பிடாரியம்மன் கோவில், வைரவர் கோவில், வீரபத்திரர் கோவில் என சைவக் கோவில்கள் காணப்படுகின்றன, தொன்மை கொண்ட கல்முனை பிரதேசத்தில், தற்போது மக்கள் வசிக்காத நிலையில், கௌதாரிமுனை, மன்னித்தலை ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்கள், மேற்படி கோவில்களுக்குக் கடல் மார்க்கப் போக்குவரத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், மேற்படி கோவில்களுக்குச் செல்லும் பாதையிலேயே, குறித்த கடலட்டைப் பண்ணை, பாரியளவில் அமைக்கப்பட்டு இருக்கிறது. "இது முழுக்க முழுக்க, எமக்குச் சொந்தமான பகுதியாகும். எங்களிடம் எந்த அனுமதியோ, கருத்துகளையோ கேட்காமல் இது அமைக்கப்பட்டுள்ளது. இதை உடனடியாக அகற்றித்தர வேண்டும்" என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

இது ஒருபுறமிருக்க, "இயற்கையாகவே இறால் உற்பத்தியாகும் இப்பிரதேசத்தில், இறால் பண்ணைகளை அமைப்பதற்கு அல்லது, அதிக வருமானம் தரக்கூடிய அட்டைப் பண்ணைகளை அமைத்து தொழில் செய்வதற்கு ஏற்ற அனுமதியைப் பெற்றுத் தருமாறு, தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்து இருக்கின்ற போதும், இதுவரை தங்களுக்கு எந்த விதமான அனுமதியும் வழங்கப்படவில்லை" என்று இங்குள்ள தொழிலாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இரணைதீவு பகுதியில் மாத்திரமே, இதுவரை கடலட்டைப் பண்ணை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளில் எந்தவிதமான அனுமதியும் வழங்கப்படவில்லை. அவ்வாறெனின், இந்தக் கடலட்டைப் பண்ணை உருவாக்கப்பட்டது எவ்வாறு என்ற கேள்வி எழுகிறது.

அரியாலையில் உற்பத்தி செய்யப்பட்ட அட்டை குஞ்சுகளை, கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி, இங்கு முதன் முதலாக வைப்பில் இடப்பட்டது. தங்களுக்கு இந்த இடத்தை, இந்தப் பிரதேச கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் அடையாளப்படுத்தி வழங்கியதாக, கடலட்டைப் பண்ணையில் கடமையில் இருப்பவர்கள் கூறினார்கள். இந்த பிரதேசத்தின் கடல் வளம், கடந்த காலங்களில் வெளிமாவட்டங்களில் இருந்து வரும் மீனவர்களால் சுரண்டப்பட்டு வந்தது. இப்போது வெளிநாட்டவர் சுரண்டும் நிலை உருவாகியுள்ளது.

ஜூன் மாதம் 29ஆம் திகதி குறித்த பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சென்றுபார்வையிட்டதுடன், "ஒரு வெளிநாட்டவர் எவ்வாறு இலகுவாக வந்து இந்த இடத்தைப் பிடித்து, கடலட்டை வளர்க்கின்ற செயற்பாடு இடம்பெறுவது ஒரு கேள்வியாகின்றது. இது தொடர்பான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு, விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். திஸ்ஸமகரகமவில் சீன இராணுவத்தினரின் சீருடைக்கு ஒப்பான உடையுடன் நின்று வேலைகளில் ஈடுபடுகின்றமை தொடர்பில் முறைப்பாடுகள் எழுந்ததை அடுத்து, அது தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கின்றது. ஆனால், இங்கே அது தொடர்பாக ஆட்சேபனைகள் எழுந்திருக்கின்ற போதிலும்கூட, செயற்பாடுகளை நிறுத்துவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழர்களின் பிரதேசத்தில் அந்நியர்கள்வந்து, இந்தப் பிரதேச மக்களின் அனுமதியில்லாமல் உள்நுழைந்திருப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. வீணே ஒரு பதட்டத்தை இந்தப் பிரதேசத்தில் ஏற்படுத்தவதற்கு, இந்த அரசாங்கம் அனுமதித்திருக்கின்றதா? என்ற கேள்வி எழுந்திருக்கின்றது" என்று கூறியிருக்கிறார்.

சீனர்களின் கடல் அட்டை பண்ணையை பார்வையிடுவதற்கு ஜூன் மாதம் 30ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் சென்றிருந்தார். அதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கும் போது, "யாழ்ப்பாணம், அரியாலை பகுதியில் கடலட்டைக் குஞ்சுகளை வளர்ப்பதாக கூறி உருவாக்கப்பட்ட அட்டை பண்ணையானது, தற்போது கிளிநொச்சியின் மூலை எல்லையில் கௌதாரிமுனை என்னும் இடத்தில், எந்த அனுமதியும் இன்றி பண்ணையைச் செய்து வருகின்றார்கள். பாசையூர், கிளிநொச்சி, கௌதாரிமுனை மீனவர்கள், கடலட்டை வளர்ப்புக்காக முன் வைத்த உரிமங்கள் மறுக்கப்பட்ட நிலையில், சீனர்கள் அட்டை வளர்ப்பைச் செய்து வருவதுடன், இயற்கையாகவே இக்கடலில் வளர்கின்ற கடலட்டைகளை நிராகரித்து, செயற்கையாக கடலட்டைகளை வைத்து விரைவான வளர்ச்சி அடைய வைத்து, அதனை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையில் சீனர்கள் ஈடுபட்டு வருகின்றனர். சீனா தற்பொழுது கால்பதித்து உள்ள இடங்கள் அனைத்தும் கேத்திர முக்கியத்துவம் பெற்ற நிலையங்களாகவே உள்ளன" எனத் தெரிவித்துள்ளார்.




வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் வடக்கு கடற்றொழிலாளர்களின் கடற்தொழில்களை நவீன மீன்பிடி முறைகளையும் இவ்வாறான அட்டை வளர்ப்புகளையும் பயன்படுத்தி விருத்தி செய்வதா?

அல்லது, வடக்கின் கடற்றொழில் வளங்ளை சீன நிறுவனங்கள் போன்ற வெளிநாடுகளுக்கு வழங்கி, தங்கள் வாழ்வாதாரத்தை அழிப்பதா என்பதே, இந்த மக்களின் கேள்வியாகும்.




# மடுமாதாவின் ஆடித் திருவிழா

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மடுத் திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா, நேற்று (02) காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் நிறைவுக்கு வந்தது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தலைமையில், குருணாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹரல்ட் அன்ரனி ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியை தொடர்ந்து திருச் சொரூப பவனியும் ஆசியும் வழங்கப்பட்டது. கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு முறைமைகளைப் பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பக்தர்களுடன் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான மடுமாதாவின் ஆடித்திருவிழா, கொரோனா தொற்றின் காரணமாக இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட அளவான பக்தர்களுடனேயே நிகழும் என ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்தது. தொடர்ந்து ஒப்புக்கொடுக்கப்பட்ட நவ நாள் திருப்பலிகளிலும் பக்தர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

> **வெளி மாவட்டங்களில் இருந்து திருத்தலத்துக்கு யாத்திரை வருவது தடை செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக, கொரோனா தொற்றில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வகையிலேயே இம்முறை திருவிழா நடத்திமுடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது**

இம்முறை, வெளி மாவட்டங்களில் இருந்து மடு திருத்தலத்துக்கு பக்தர்கள் யாத்திரை வருவது முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக, கொரோனா தொற்றில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கும் வகையிலேயே இம்முறை திருவிழா நடத்திமுடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சுமார் 400 ஆண்டுகள் பழைமை கொண்ட மடு அன்னையின் திருத்தலம், போர்த்துக்கேயரின் வருகையின் பின்னர் 1544ஆம் ஆண்டில், மன்னாரைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள், தற்போதைய மடுத் திருத்தலப் பகுதியில் ஒரு சிறிய அன்னை மரியாள் உருவத்தை வைத்து வணங்கினர். மேலும், 1583ஆம் ஆண்டில் மேலும் சில கிறிஸ்தவர்கள் ஒரு சிறிய தேவாலயத்தை இவ்விடத்துக்கு அருகில் கட்டினர்.

'மண்தாய்' என்று அழைக்கப்பட்ட இதுவே, மடு அன்னையின் முதல் வீடாக இருந்தது. 1656ஆம் ஆண்டில் டச்சுக்காரர் இலங்கையில் கொலனி ஆதிக்கத்தைத் தொடங்கிய போது, கத்தோலிக்கரைத் துன்புறுத்தியதாக வரலாறு கூறுகிறது. அப்போது புகலிடம் தேடிய 30 கத்தோலிக்க குடும்பங்கள், தங்களுடன் மடு அன்னையின் திருவுருவத்தை எடுத்துச் சென்று, 1670ஆம் ஆண்டில் மருதமடு என்ற இடத்தில் வைத்தனர். அந்த இடத்தில் தான் தற்போதைய மடு அன்னை திருத்தலம் உள்ளது.

தமிழ், சிங்கள கத்தோலிக்கரின் புனித வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது. போர் தொடங்கியதில் இருந்து, இத்திருத்தலத்தக்கு செல்வோரின் தொகை பல மடங்கு குறைந்த நிலையில் காணப்பட்டது.



போரின் தாக்கத்தால் இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்காண மக்கள், இத்திருத்தலத்தின் சுற்று வட்டாரத்தில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்தனர். 2008ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் மடு திருத்தலத்தை நோக்கி தொடர்ச்சியாக நடத்தப்பட்ட எறிகணை வீச்சால் தேவாலயம் பலத்த சேதத்துக்கு உள்ளாகியது.

இதனால் இங்கு அடைக்கலம் தேடிவந்திருந்த மக்கள் அனைவரும் வேறு பாதுகாப்பான இடத்தை நோக்கி இடம்பெயர்ந்து சென்றனர். இந்தத் திருத்தலத்தில் இறுதியாகத் தங்கியிருந்த குருக்களும் பணியாளர்களும் கூட வெளியேறினர்.

இதைடுத்து, தேவாலயத்தில் 400 ஆண்டுகளாக அருள் பாலித்து வரும் மடு அன்னையின் திருச்சொரூபத்தின் பாதுகாப்புக் கருதி, அச்சொரூபம் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான்காம் திகதி மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தேவன்பிட்டி புனித சவேரியர் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நாட்டில் இடம் பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக, மடு அன்னையின் திருச்சொரூபம் மட்டுமன்றி, மடு அன்னையின் பிள்ளைகளும் இடம்பெயர்ந்தனர். மீண்டும் யுத்தம் முடிவடைந்து, தமது இடத்தை நோக்கி மடு அன்னையின் திருச்சொரூபம் நகர்ந்த போது, மக்களும் நகரத் தொடங்கினர். அப்போது மக்களின் உடைமைகள் அப்பிரதேசத்தில் யுத்தத்தினால் முழுமையாக அழிக்கப்பட்டிருந்தன.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், மடுவைச் சூழவுள்ள மக்கள், கட்டம் கட்டமாக குடியேற்றம் செய்யப்பட்டனர். மடு அன்னையின் விசுவாசத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தொடர்ந்தும் தமது துன்ப துயரங்களையும் நன்மை தீமைகளையும் மடு அன்னையின் விசுவாசத்தோடு சமர்ப்பித்து வருகின்றனர். நாட்டில் தமிழர், சிங்களவர் ஆகியோரின் இனஐக்கியத்துக்கு மடுத்திருத்தலம் முன் உதாரணமாகத் திகழ்கின்றது.

# கிணறு குடித்த 'சிறுநீர்'

எச்.எம்.எம். பர்ஸான்








உலகில் அனைத்துப் பகுதிகளிலும் குழந்தைகளைத் துன்புறுத்தும் சம்பவங்கள் நாளும் பொழுதும் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. உறவினர்கள், அயலவர்கள், அந்நியர்கள் போன்றோரிடம் குழந்தைகளும் சிறுவர்களும் சிக்குப்பட்டு சின்னாபின்மாகும் பல சம்பவங்களை தினமும் ஊடகங்கள் ஊடாக அறிந்து மனம்வெதும்புகின்றோம். சிலசம்பவங்கள், பெற்றெடுத்த தாய், தந்தையர் மூலமாக நிகழ்வதை அறிந்து, அந்தப் பெற்றோர்கள் மீது, ஆத்திரமும் ஆவேசமும் அடைகின்றோம்.

அடித்து துன்புறுத்தல், சூடு வைத்தல், கடின வேலைகளைக் கொடுத்தல் போன்ற காரியங்களுடன், குழந்தைகளை கொல்லும் அளவுக்கு பெற்றோரின் மனநிலை மாறி இருப்பதை மனநோய் என்றுதான் கருதவேண்டும்.

அவ்வாறான நிலையில்தான், மக்களை சோகத்தில் ஆழ்த்திய சம்பவங்கள் இரண்டு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், தந்தையர்களால் குழந்தைகள் கிணற்றில் வீசப்பட்டு கொலை செய்யப்பட்ட சோகச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த ஜூலை மாதம் 10 ஆம் திகதி, வாழைச்சேனை, பிறைந்துறைச்சேனை ஐஸ் மோல் பின் வீதியிலுள்ள கிணற்றில், உயிரிழந்த நிலையில் சிறுவன், சடலமாக மீட்கப்பட்ட சம்பவம், அந்தப் பகுதியைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியது.

சம்பவம் இடம்பெற்ற அன்றைய தினம், இரவு தூக்கத்தில் இருந்த தங்களுடைய பிள்ளை திடீரென்று காணாமல் போனதாகவும் பிள்ளையைத் தேடி அலைந்து திரிந்து, பின்னர் கிணற்றில் பார்த்தபோது, பிள்ளை உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாகவும், பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் போது பெற்றோர் வாக்குமூலம் கொடுத்திருந்தனர்.

குறித்த சப்பவம் தொடர்பாக, பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்ட போது, சிறுவனின் தந்தையின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து, தந்தையைக் கைது செய்த பொலிஸார், தொடர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

உயிரிழந்த சிறுவனின் தந்தை, ஏற்கெனவே பெண் ஒருவரைத் திருமணம் முடித்து, பிறந்த தனது பிள்ளை ஒன்றைச் சித்திரவதை செய்ததக் காரணமாகத் தண்டனை அனுபவித்தவர் என்று உறவினர்கள் மூலம் தெரியவந்தது.

தண்டனை அனுபவித்த பின்னர், அவர் வேறொரு பெண்ணைத் திருமணம் முடித்து, நான்கு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த நிலையில், தனது மூன்றாவது பிள்ளையான நான்கு வயதுடைய ஹாபில் எனும் சிறுவனையே இவ்வாறு கிணற்றுக்குள் வீசிக் கொலை செய்துள்ளார்.

> இறந்த சிறுவன், இரவு நேரத்தில் படுக்கையில் சிறுநீர் கழிக்கிறான் எனக் காரணம் கூறி, சிறுவனின் ஆணுறுப்பில் சிறுவனின் தந்தை தாக்கிதால், சிறுவன் சிகிச்சை பெற்று வந்ததாகவும் அச்சம்பவத்தை அறிந்து கொண்ட நபர்கள் கவலையுடன் தெரிவித்தனர்

இறந்த சிறுவன், இரவு நேரத்தில் படுக்கையில் சிறுநீர் கழிக்கிறான் எனக் காரணம் கூறி, சிறுவனின் ஆணுறுப்பில் சிறுவனின் தந்தை தாக்கிதால், சிறுவன் சிகிச்சை பெற்று வந்ததாகவும் அச்சம்பவத்தை அறிந்து கொண்ட நபர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

ஜூன் ஒன்பதாம் திகதி இரவு 11 மணி அளவில், கிணற்றில் வீசப்பட்டு கொலை செய்யப்பட சிறுவன், மறுநாள் மதியம் ஒரு மணிக்குப் பின்னரே, கிணற்றிலிருந்து மீட்கப்பட்டான். அதுவரை, சிறுவனின் தந்தை கொஞ்சம்கூட பதட்டம்

> இரவு 11 மணி அளவில், கிணற்றில் வீசப்பட்டு கொலை செய்யப்பட சிறுவன், மறுநாள் மதியம் ஒரு மணிக்குப் பின்னரே, கிணற்றிலிருந்து மீட்கப்பட்டான். அதுவரை, சிறுவனின் தந்தை கொஞ்சம்கூட பதட்டம் அடையாமலும் கண்கலங்காமல் தனது அன்றாட வேலைகளைச் செய்து கொண்டு திரிந்ததை, அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர்

அடையாமலும் கண்கலங்காமல் தனது அன்றாட வேலைகளைச் செய்து கொண்டு திரிந்ததை, அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர்.

கொஞ்சிக் கொஞ்சி வளர்க்க வேண்டிய பச்சிளம் பாலகனை, ஈவிரக்கமின்றிக் கொலை செய்த அக்கொடூரத் தந்தை, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சிறுவனின் தாயார், மூன்று பிள்ளைகளுடன் தனது குடும்ப உறுப்பினர்களிடம் அடைக்கலம் புகுந்துள்ளார்.

இதேபோன்றுதான், வாழைச்சேனை, மாவடிச்சேனை, பாடசாலை வீதி எனும் முகவரியில், தாய் இல்லாமல் தந்தையின் பராமரிப்பில் வாழ்ந்து வந்த அஸிமுல் தாஹியா (வயது 07), அஸிமுல் ஹக் (வயது 10) ஆகிய இரண்டு குழந்தைகளும் 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில், 45 வயதான குழந்தைகளின் தந்தை முஹம்மது லெப்பை சுலைமா லெப்பை என்பவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தாய், சம்பவம் இடம்பெறுவதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர், நீண்டகாலம் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார். அன்றிலிருந்து, இரண்டு பிள்ளைகளையும் பிள்ளைகளின் தந்தையான முஹம்மது லெப்பை சுலைமா லெப்பை என்பவர்தான் மிகுந்த பாசத்துடன் வளர்த்து வந்துள்ளார்.

குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் போன்ற விடயங்களில் சுலைமா லெப்பை அதிக கரிசனை காட்டி வந்ததாக உறவினர்களும் அயலவர்களும் புகழ்ந்து கூறினார்கள்.

ஏன், எதற்காக இப்படியான காரியத்தை சுலைமா லெப்பை செய்தார் என்று இன்றும் கூட, விடை காண முடியாமல் அனைவரும் திகைத்துப்போய் உள்ளனர்.

இவ்வாறு கொலைக் குற்றத்துக்காகக் கைது செய்யப்பட தந்தை, தன்னை யாரோ கொலை செய்ய வருவதாகவும், தான் கொல்லப்பட்டால் குழந்தைகள் அனாதையாகி விடுவார்கள் என்ற காரணத்தால் தான் தான் இக்காரியத்தை செய்துள்ளதாகவும் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

தாய் இல்லாமல், வறுமை நிலையில் இரண்டு குழந்தைகளையும் பராமரிப்பதற்கு சிரமப்படுவதை அறிந்து கொண்ட பலர், குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கக் கேட்ட போது, "குழந்தைகளை என்னிடமிருந்து பிரிக்க முடியாது; அவர்கள் இருவரும் ஒன்றாகவே இருக்க வேண்டும்" என்று அந்தத் தந்தை கூறிய சம்பவத்தைப் பலரும் இன்றும்கூட கண்ணீர்மல்கக் கூறுகின்றனர்.

> தன்னை யாரோ கொலை செய்ய வருவதாகவும், தான் கொல்லப்பட்டால் குழந்தைகள் அனாதையாகி விடுவார்கள் என்ற காரணத்தால் தான் தான் இக்காரியத்தை செய்துள்ளதாகவும் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்

எது எவ்வாறாயினும், இவ்வாறு குழந்தைகள் கொலை செய்யப்படுவதை, யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. இனிமேலும் இவ்வாறான சம்பங்கள் நடக்காமல் இருக்க, சமூகத்திலுள்ள அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

தனது பிரதேசத்தில் என்ன நடக்கிறது, தனது பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறது, பிள்ளைகளை எவ்வாறு பெற்றோர்கள் வழி நடத்துகிறார்கள் என்பன போன்ற விடயங்களை, கட்டயாமாக நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். இவ்வாறான விடயங்களில், நாம் கவனம் செலுத்தினால் மாத்திரமே, இவ்வாறான கொலைச் சம்பவங்களில் இருந்து சிறுவர்களைக் காப்பாற்ற முடியும்.

நாம் அனைவரும், தனக்கு ஏன் இந்தப் பிரச்சினை என்றெண்ணி ஒதுங்கி இருக்காமல், இவ்வாறன சம்பவங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி, சிறுவர்களுக்கு உரிய பாதுகாப்புகளை வழங்க முன்வர வேண்டும்.



# இயேசுவும் மன்னிக்கார்



ப.பிறின்சியா டிக்சி
p.p.dixci@gmail.com





"பிதாவே, இவர்களை மன்னியும்; தாங்கள் செய்வது இன்னதென்று அறியா திருக்கிறார்களே" (லூக்கா 23:34)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயேசு சிலுவையில் தொங்கியபோது சொன்ன ஏழு வாசகங்களில் இதுவும் ஒன்று.

ஒரு சிறு குழந்தை தவறு செய்யும்போது அறியாமல் செய்து விட்டது என்று கூறி, சுலபமாக நாம் மன்னிப்பதுபோல, இயேசு தம்மை சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்தார். அவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்துவிட்டார்கள் என்றார்.

இவ்வாறான சிலுவையில் அறையும் கொடூரச் செயல்களைச் செய்பவர்கள் இன்றும் எம் மத்தியில் இருக்கவே செய்கின்றனர். ஆனால், இவர்களை அறியாமல் செய்தனர் என இயேசுவைப் போன்று மன்னிப்பது கடினமே.

ஏனெனில், இவர்கள் பழி தீர்க்கும் நோக்கத்துடன், நன்றாகத் திட்டமிட்டு, இதுபோன்ற சிலுவைக் கொடூரத்தை, கடந்த 25ஆம் திகதியன்று அம்பிட்டி பகுதியில் நடத்தி முடித்துள்ளனர்.

அன்றையதினம், கண்டி, பலகொல்ல பிரதேசத்தை சேர்ந்த இரு நண்பர்கள் கடத்திச் செல்லப்பட்டு, பத்துக்கும் மேற்பட்ட குழுவினரால் கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டுள்ளனர். அதன் உச்சக்கட்டமாகவே, பலகையொன்றின் மீது அவ்விருவரின் கைகளை வைத்து ஆணிகளை ஏற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான பூசாரியே (கப்புவா) சுமார் ஒரு வாரமாக தலைமறைவாகியிருந்த நிலையில், கண்டி, பலகொல்ல பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் (01) சரணடைந்தையடுத்து, கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பலகொல்ல பிரதேசத்திலுள்ள தேவாலயமொன்றின் இந்தப் பூசாரிக்கு பேஸ்புக்கில் சேறு பூசியதாகக் கூறப்படும் 44 மற்றும் 38 வயதுகளையுடைய இரு நண்பர்களையும், தன்னுடைய வீட்டுக்கு பூசாரி அழைத்துள்ளார். அதன்பின்னர், அம்பிட்டிய பிரதேசத்துக்கு அவர்களைக் கடத்திச் சென்று, அங்கிருந்த குழுவினருடன் சேர்ந்தே அவ்விருவரையும் கடுமையாக தாக்கிவிட்டு, இவ்வாறு மிகக் கொடூரமான முறையில், ஆணிகளை ஏற்றித் துன்புறுத்தியுள்ளனர்.

இதில் பாதிக்கப்பட்ட இருவரும் கண்டி வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பூசாரியும் ஏனையோரும் அங்கிருந்து தப்பியோடியிருந்தனர். பிரதேசத்திலிருந்தும் தலைமறைவாகியிருந்த அவர்கள் அனைவரையும் தேடி பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டிருந்தனர்.

இதன் தொடராக, துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட இருவரையும் கடத்திய வானின் சாரதி மற்றும் மேலும் இருவரும் கடந்த திங்கட்கிழமை (28) கைதுசெய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட இவ்விருவரும் அம்பிட்டிய கால்தென்ன பிரதேசத்தில் பற்றைக்காட்டுக்குள் மறைந்திருந்த போதே கைது செய்யப்பட்டனர்.

ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையான இவ்விருவரும் கைது செய்யப்படும் போது, ஹெரோய்ன் பயன்படுத்தியிருந்தனர் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இந்தக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வானும் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் பின்னணியிலேயே, நண்பர்கள் இருவரையும் கடத்திச்சென்று, அவ்விருவரின் உள்ளங்கைகளில் ஆணிகளை அறைந்ததாகக் கூறப்படும் பூசாரியும் சரணடைந்த வேளை, கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, இந்தச் சிலுவையில் அறைந்த சம்பவத்துடன் தொடர்புபட்ட 11 பேர், நேற்று முன்தினம் வியாழன் (01) வரை கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களைக் கைதுசெய்வதற்காக 4 பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டன என பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பணம் கொடுக்கல் வாங்கலை அடிப்படையாக வைத்து, பேஸ்புக் சமூகத்தளத்தில் அவமானப்படுத்தியுள்ளனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதற்கமைய இச்சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான 30 வயதுடைய பூசாரி, அம்பிட்டிய மற்றும் சில பிரதேசங்களில் புதையல் தோண்டுதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன், தேவாலயங்களை நடத்திச் செல்பவர் என்றும் தெரியவந்துள்ளது

கடத்தப்பட்டு கொடூரமான முறையில் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இருவரும் பிரதான சந்தேகநபரான பூசாரியின் நண்பர்கள் என்றும் திடுக்கிடும் தகவலும் தெரியவந்துள்ளது.

யுத்த காலத்தில் நாட்டில் மலிதாக்கப்பட்டிருந்த கடத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் இன்றும் தொடர்கின்றமை உண்மையில் வேதனைக்குரிய விடயமே.

அதிகாரத்தை நிலைநாட்ட அல்லது அரசியல் காரணங்கள் என இருந்த கடத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் தற்போது தனிப்பட்ட குரோதங்களை தீர்க்க என வடிவங்களே கொஞ்சம் மாறியிருக்கின்றன.

அவ்வாறே, கடத்தப்பட்டு சங்கிலியால் கைகள் கட்டப்பட்ட நிலையில், களனி கங்கையில் வீசப்பட்ட ஹங்வெல்ல பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய மந்திரவாதி ஒருவரும், கடந்த வாரம் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சிலுவையில் அறைந்த சம்பம் இடம்பெற்ற மறுதினமாக 26ஆம் திகதியன்றே, இவ்வாறு சங்கிலியால் கைகள் கட்டப்பட்ட நிலையில், நவகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரணாலை பகுதியில் களனி கங்கையில் இந்த மந்திரவாதியின் சடலம் மிதந்த போது மீட்கப்பட்டது.

இந்நபருடன் தகாத தொடர்பு வைத்திருந்த பெண், மற்றுமொரு நபருடன் கொண்டிருந்த முறையற்ற உறவு காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, மந்திரவாதியுடன் முறையற்ற உறவு வைத்திருந்த பெண் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட மந்திரவாதியும் கைது செய்யப்பட்ட பெண்ணும் ஹங்வெல்ல பொலிஸ் பிரிவில் எம்புல்கம பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்துள்ள நிலையில், கடந்த 23ஆம் திகதி, இருவர் வீட்டுக்குள் புகுந்து மந்திரவாதியை வலுக்கட்டயமாக கடத்திச் சென்றுள்ளதாகக் கைதுசெய்யப்பட்டுள்ள பெண், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும், பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், அப்பெண்ணுக்கும் கல்குவாரியில் வேலை பார்க்கும் எல்புல்கம பகுதியைச் சேர்ந்த சாரதிக்கும் இடையில் பிறிதொரு தகாத தொடர்பு ஏற்பட்டுள்ளமை காரணமாகவே, இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, பனுவஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய சாரதியும், ஹோமாகம- பிட்டிபன பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய அவரது உறவினரான நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸா ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள், கொலைக்குப் பயன்படுத்திய கத்தியல் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் ஹங்வெல்ல பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறே தனிப்பட்ட பழி தீர்க்கும் படலங்கள் பல அண்மைக்காலமாக அரங்கேறிவருகின்றன. இதன்மூலம், அவர்கள் எதனை நிலைநாட்ட முயல்கின்றனர்?

தமக்கு வேண்டப்பட்ட அல்லது வேண்டப்பாடாத நபர்களில் வாழ்க்கையையும் சீரழித்து தமது வாழ்கையையும் அவர்கள் சீரழிக்கின்றனர். திடீரென ஏற்பட்ட மிகையான கோபத்தில் அவசரப்பட்டு செய்யும் செயல்களாகவும் இவை இருப்பதில்லை. நீண்ட நாள்கள் திட்டமிடப்பட்டே இவ்வாறான கொடூரச் செயல்கள் நடத்தப்படுகின்றன. எனவே, சட்டம் இவர்களுக்கான தண்டனையை வழங்கும் என்பது நிச்சயம்.

மத்தேயுவின் கூற்றுப்படி, இயேசுவின் சிலுவைச் சாவு மறைவாக்கு நிறைவேறும்படி நிகழ்ந்தது. அதாவது, புதியதொரு மக்கள் இனத்தை உருவாக்குவதற்காகக் கடவுள் வகுத்த திட்டத்துக்கு ஏற்ப இயேசுவின் சிலுவைச் சாவு நிகழ்ந்தது.

எனினும், இந்த அர்த்தத்தை வீணாக்கும் இது போன்ற அடாவடியான கருணையற்ற செயல்களைப் புரிகின்றவர்களை இயேசுவும் மன்னிக்கமாட்டார்.



வெடித்துச் சிதறிய

# BIO- BUBBLE


மகேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com





தற்போதெல்லாம் சமூகத்தில் கீழ் மட்டத்திலாக இருக்கட்டும் அல்லது உயர்மட்டத்திலாக இருக்கட்டும் ஏதாவது ஒரு சம்பவம் நிகழுமாயின், அது உடனடியாக சமூக வலைத்தளங்களில் பதிவிடப்படுகின்றது. இது தொழின்முறைசார் ஊடகங்களை விட, இலகுவாக அனைத்து தரப்பினரையும் எவ்வித மட்டுப்பாடுகளும், கட்டுப்பாடுகளும் இன்றி சென்றடைவதால் தான், அனைவரும் சமூகவலைத்தளங்களை நாடுகின்றனர். சமூக வலைத்தளங்களின் சக்தியை அல்லது பலத்தை அறிந்தமையால் தான் இன்று சமூக வலைத்தளங்களையும் கட்டுப்படுத்தும் ஓர் ஏற்பாட்டை எமது அரசாங்கம் முன்னெடுக்க முயற்சித்து வருகின்றது.

இதற்கமைய, கடந்த வாரம் இலங்கையில் மட்டுமல்ல, உலகலவில் பெரிதும் பேசும் பொருளாக காணப்பட்ட இரண்டு விடயங்களுள் முதலாவது, நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய உரை; இரண்டாவது, இங்கிலாந்துக்குச் சென்றுள்ள இலங்கை அணி வீரர்களின் ஒழுக்க மீறல் செயற்பாடுகள். இவை இரண்டுமே சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பேசப்பட்டன. விசேடமாக மீம்ஸ்கள் எனப்படும் தற்போதைய கதை கூறல் முறை ஊடாக அநேகர் தமது பரபரப்பு, ஆதங்கம், கோபம், விரக்தியை மேற்குறிப்பிட்ட இந்த இரண்டு சம்பவங்களுக்கு எதிராகவும் சமூக வலைத்தளங்களில் கொட்டித் தீர்த்திருந்தனர்.

இந்த நிலையில் தான், ஜூன் மாதம் 23ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமான 3 இருபதுக்கு இருபது போட்டிகள் 3 ஒருநாள் போட்டிகளுக்காக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பயணப்பாதுகாப்பு வளையமுறை (BIO- BUBBLE) மூலம் 6.9 மில்லியன் ரூபாய் செலவில் மிகவும் பாதுகாப்புக்கு மத்தியில் எமது நாட்டு கிரிக்கெட் அணி, இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எனினும், கடந்த சில வருடங்களாக எந்தவொரு போட்டியிலும் சோபிக்காத எமது அணி வீரர்கள், 3 இருபதுக்கு இருபது போட்டியிலும் படு தோல்வியடைந்து, அத் தோல்வியை சிறிதும் பொருட்படுத்தாமல், அணியின் 3 சிரேஸ்ட வீரர்களான உப தலைவர் குசல் மெண்டிஸ், விக்கட் காப்பாளர் நிரோசன் திக்வெல்ல, ஆரம்ப துடுப்பாட்ட வீரரான தனுஸ்க குணதிலக ஆகியோர் முகக் கவசம் அணியாமல் கையில் சிகரெட்டுடன், பயணப்பாதுகாப்பு வளைய முறையைத் தகர்த்தெறிந்து, இங்கிலாந்தின் டராம் நகர வீதிகளில் சுற்றிய காணொளி சமூக வலைத்தளங்களில் உலாவந்தமையானது, இலங்கை அணியின் மீது என்றுமில்லாத வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், இந்த வீரர்களின் இந்த ஒழுக்க மீறல்கள் செயற்பாடு, வீடியோவாக, அருகிலிருக்கும் காரொன்றிலிருந்து பதிவு செய்யப்படுவதைக் கூட இவர்கள் அறியாமல் தமது செயலில் தீவிரமாக இருந்த நிலையில், “அருகிலிருந்து வீடியோ எடுப்பதே தெரியாமல் இருக்கும் இந்த வீரர்கள், 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசப்படும் பந்தையா அவதானிக்கப் போகிறார்கள்” என்றும் சிலரது பதிவுகள் நகைச்சுவையாக இருந்தாலும் அதிலும் உண்மை இருப்பதை மறுக்க முடியாது.

ஒரு காலத்தில் இலங்கை கிரிக்கெட் அணி என்றாலே ஏனைய நாட்டு அணிகளை கலக்கம் அடையச் செய்யும். எமது அணியின் முன்னாள் சிரேஷ்ட வீரர்கள் ஒவ்வொருவரும் களத்தடுப்பு, துடுப்பாட்டம், பந்துவீச்சு, விக்கட் காப்பு என ஒவ்வொருவரும்

> **கிரிக்கெட் சுற்றுப் பயணம் செல்வதாயின் அனுபவமிக்கவர்கள் முகாமையாளராக இருக்க வேண்டும். புகைப்பிடிப்பது என்பது கிரிக்கெட் வீரர் ஒருவருக்கு எவ்வளவு தடையை ஏற்படுத்தும் என்பதை நாம் அறிவோம்**

தத்தமது துறைகளில் முத்திரைப் பதித்தவர்கள். இவ்வாறு பல முத்திரை பதித்த, சாதனை வீரர்கள் கட்டிக் காத்த இலங்கை அணியின் மானம், விளையாட்டில் மட்டுமல்ல ஒழுக்கத்திலும் கப்பல் ஏறிக்கொண்டிருப்பதை யாரும் மறுதலிக்கமாட்டார்கள்.

கிரிக்கெட்டாக இருக்கட்டும் அல்லது வேறு எந்த விளையாட்டக் கூட இருக்கலாம், ஒரு தேசிய விளையாட்டு அணியில் இடம்பிடிப்பதானது குதிரைக்கொம்புக்கு ஒப்பானது என, மிகவும் கஸ்டப்பட்டு, பலரின் கை கால்களில் விழுந்து தமக்கென ஓர் இடத்தைப் பிடித்தவர்களுக்கே தெரியும். இன்று தேசிய அணிகளில் இடம்பிடிக்க பின்தங்கிய கிராம மட்டங்களில் அதி திறமை மிக்க வீரர்கள் இருந்தும் அவர்களுக்கான வாய்ப்பு பணம், அந்தஸ்து, பரிந்துரை போன்ற காரணங்களால் கைக்கூடாத நிலையில், எவ்வித கஸ்டமும் இல்லாமல் இலகுவாக வாய்ப்பைப் பெற்றுக்கொண்ட இப்போதைய வீரர்களுக்கு குறிப்பாக இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் சிலருக்கு, இவ்விளையாட்டின் மீதும் நாட்டின் மீதும் உணர்வற்றுப் போய்விட்டது என்றே கூறவேண்டும்.

இது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சிரேஷ்ட வீரர்களுள் ஒருவரான குமார் சங்கக்கார “திறமையான கிரிக்கெட் வீரர்களாக மாத்திரம் இல்லாமல், ஆடுகளத்துக்கு வெளியே ஒரு சிறந்த மனிதராகவும் வாழ்க்கையை நேர் மறையாக வாழ்வதற்கான திறமையும் வேண்டும்” எனப் பதிவிட்டுள்ளார்.

அதேபோல் முன்னாள் வீரர்களுள் ஒருவரான திசர பெரேரா “நான் அணியில் இருந்த போது பாரிய எதிர்பார்ப்புடன் இருந்த விடயம் தான் ஒழுக்கம். அதனை செயற்படுத்த பாரிய முயற்சிகளை முன்னெடுத்தேன். எனினும் அந்த ஒழுக்கத்தை செயற்படுத்த போய் இறுதியில் பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானேன்” என தனது மன ஆதங்கத்தைப் பதிவிட்டுள்ளார். இந்த நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியின் வைத்திய குழுவின் பிரதானியான பேராசிரியர் அர்ஜுன டீ சில்வா,” இந்த ஒழுக்க மீறல் செயற்பாடுகளால் நான் மிகுந்த கவலையும் கோபமும் அடைகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், “போட்டிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு, இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையுடன் கலந்துரையாடித் தான் இந்த பயணப்பாதுகாப்பு வளைய முறை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முறையில் செல்பவர்கள் அதிலிருந்து வெளியே வரமுடியாது. அவ்வாறு வெளியேறினாலும் மீண்டும் அதனுடன் இணைய முடியாது. இந்தப் பயணப்பாதுகாப்பு வளையமுறையின் பாதுகாப்புக்காக இராணுவத்தினரே ஈடுபட்டுள்ள நிலையில், இந்தப் பயணப்பாதுகாப்பு வளையமுறையிலிருந்து யாராவது வெளியேற நினைத்தால் துப்பாக்கியை காட்டியாவது அவர்களை தடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் இங்கிலாந்து சென்ற எமது வீரர்களுக்கு சில தளர்வுகள் வழங்கப்பட்டன. அதாவது தேவையாயின் தமது குடும்ப உறுப்பினர்களையும் அழைத்துச் செல்லும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. அதேபோல் மட்டுப்பாடுகளுக்குள் அவர்கள் நடைப்பயிற்சி, உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதைவிட சிறப்பம்சம் யாதெனில் இந்திய வீரர்களுக்கு அவர்களது நாட்டில் கொரோனா தடுப்பூசி ஏற்றுவதற்கு முன்னரே எமது வீரர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. அந்தளவுக்கு கொரோனா தொற்றிருந்து எம் நாட்டு வீரர்களைப் பாதுகாக்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன” என்றார். ஆனால், இவர்கள் மூவரும் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்ததால், இவர்களிடம் எவ்வித தவறும் இல்லையென்றும் முகக் கவசம் அணியாமல் வீதியில் பயணித்தமையே இவர்கள் செய்த தவறென, இவர்களுடைய தவறை இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் தொலைக்காட்சி ஒன்றின் செவ்வியில் நியாயப்படுத்தியுள்ளார்.

இதற்கு முன்னரும் போட்டி நடைபெற்ற பின்னர், குறித்த வீரர்கள் வெளியில் சென்றதாகவும் முகாமையாளர் நியாயப்படுத்தியுள்ள நிலையில் தான், இலங்கை அணியின் முன்னாள் வேகப் பந்து பயிற்சிவிப்பாளர் அனுஷ சமரநாக்க, “கிரிக்கெட் சுற்றுப் பயணம் செல்வதாயின் அனுபவமிக்கவர்கள் முகாமையாளராக இருக்க வேண்டும். புகைப்பிட்டிப்பது என்பது கிரிக்கெட் வீரர் ஒருவருக்கு எவ்வளவு தடையை ஏற்படுத்தும் என்பதை நாம் அறிவோம்” என தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இலங்கை அணியின் மற்றுமொரு முன்னாள் பிரபலம் சனத் ஜயசூரிய “நான் பல இன்னல்களைக் கடந்தே இலங்கை அணியில் இடம்பிடித்தேன். சனத் ஜயசூரிய நடந்துச் சென்றார் என்பதற்காக, தற்போதைய வீரர்களையும் நடந்து செல்லச் சொல்வது நல்லதல்ல. அப்படி கூறுவது அசாதாரணமானது. ஆனால் கஸ்டப்பட வேண்டும். அர்ப்பணிப்பு செய்ய வேண்டும். எல்லாவற்றிலும் பார்க்க ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். அதேபோல் இவர்களை சரியாக வழிநடத்த முகாமையாளர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்” என உருக்கமாகப் பதிவிட்டுள்ளார்.

இதற்கமைய சம்பவம் நடந்த மறுநாளே, 29ஆம் திகதி பிற்பகல் 1.15 மணியளவில் ஸ்ரீ லங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் 3 வீரர்களும் நாட்டை வந்தடைந்தனர். வழமைபோல் அல்லாமல் சாதாரண பயணிகளின் ஆசனத்திலேயே வருகை தந்ததுடன், மிகவும் குறைந்த விலையை செலுத்தக்கூடிய நீர்கொழும்பு பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பில் வெளியான வீடியோவின் தன்மையை சரிபார்க்க முகாமையாளரிடம் இலங்கை கிரிக்கெட் சபை அறிக்கை கோரியுள்ளதுடன், இவர்கள் தொடர்பில் நடைபெறும் விசாரணைகள் நிறைவடையும் வரை இவர்கள் மூவரும் அனைத்து போட்டிகளிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டனர்.

இத்துறையின் அனுபவம்மிக்க பலரது கருத்துகளின் படி, இந்த வீரர்களுக்கு குறைந்தது 5 வருட போட்டித் தடையாவது விதிக்கப்பட வேண்டும் என்கின்ற நிலையில், குறித்த மூவருக்கும் வழங்கப்படும் தண்டனை இனி வரும் இளைய வீரர்களுக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும். எனவே, ‘ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்உயிரினும் ஓம்பப்படும்’ என்ற வள்ளுவரின் கூற்று எக்காலத்துக்கும் சாலப் பொருந்தும் என்பதை நினைவுக் கூறுவோமாக



# ‘பாவம்’ பாண்டி ஆறு

## வந்தால் போகமுடியாது; போனால் வரமுடியாது

பலாங்கொடை மஹிந்த குமார்

இரத்தினபுரி, பம்பரளகந்த பிரதேசத்தில் ‘சலசல’ எனப் பாய்ந்தோடும் பாண்டி ஆற்றை கடந்து செல்ல, பாலம் இல்லாமையால், பாண்டி ஆற்றில் அடித்து செல்லப்பட்டு, இதுவரையில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜூன் மாதம் எட்டாம் திகதி, நாட்டின் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்து கொண்டிருந்தது. காலை முதல் பல ஆறுகள் பெருக்கெடுத்தும் காணப்பட்டன. பாண்டி ஆறிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

அன்று, நாடு முழுவதும் பயனத்தடை அமல்படுத்தப்பட்டிருந்த நிலையில், மாலை எட்டு மணியளவில், 31 வயதுடைய சாந்த என்ற இளைஞன், பம்பரலகந்த தோட்டத்தில் உள்ள கடைக்கு, வீட்டுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகச் சென்றுள்ளான்.

அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக கடைக்கு சென்ற மகன், ஒரு மணித்தியாலம் கடந்தும் வீட்டுக்கு வரவில்லை, அதிர்ச்சியடைந்த தாயார், தனது மகனின் நண்பனை என்னவென்று பார்த்து வருமாறு அனுப்பியுள்ளார்.

ஆற்றுக்கு அந்தப் பக்கத்தில் உள்ள கடைக்கு சென்ற சாந்த, அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டு வருவதைக் சான்தையின் நண்பன் கண்டான். “சாந்த ஆறு பெருக்கெடுத்து காணப்படுகின்றதே; எப்படி நீ ஆற்றைக் கடந்து வருவாய்” என்று சாந்தையின் நண்பன் சாந்தையிடம் கேட்டான்.

“என்ன செய்வது, நான் எப்படியாவது ஆற்றைக் கடக்க வேண்டுமே; இல்லை என்றால், நான் எப்படி வீட்டுக்கு வருவது? வீட்டிலும் அம்மாவுக்கும் பாட்டிக்கும் சாப்பாட்டுக்குத் தேவையான பொருட்கள் இல்லையே” என்று நண்பனுக்குப் பதில் அளித்த சாந்த, ஆற்றைக் கடந்து வருவதற்கு முயன்ற போது, இரண்டு, மூன்று அடிகள் ஆற்றில் கால்வைத்த பொழுதில், நண்பனின் கண் எதிரே, பாண்டி ஆற்றில் சாந்த அடித்துச் செல்லப்பட்டான்.

ஆற்றில் சாந்த அடித்துச் செல்லப்பட்டதைக் கண்ட அவனது நண்பன், ஓட்டமாய் ஓடி, சாந்தவின் அம்மாவிடம் நடந்தவற்றைப் பதட்டத்துடன் கூறினான். மகன், பாண்டி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட தகவலைக் கேட்ட தாயார், அதிர்ச்சியில் மயங்கி வீழ்ந்தார். உடனடியாக, அயலவர்களை அழைத்துக்கொண்டு, ஆற்றை நோக்கிச் சென்றான் சாந்தையின் நண்பன். சாந்தையைத் தேடினார்கள்.

அன்றைய இரவு நிலவிய மழையுடனான வானிலையிலும், இரவு முழுவதும் அப்பிரதேச மக்கள், சாந்தையை தேடினார்கள்; சாந்த கிடைக்கவில்லை. சாந்தையின் உறவினர்களால் வெவள்வத்த பொலிஸ் நிலையத்துக்கும் அப்பிரதேசத்தின் கிராம சேவகருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.







> **நான்காவது நாள், சாந்த அடித்துச் செல்லப்பட்ட இடத்தில் இருந்து, சுமார் 500 மீற்றர் தூரத்தில் இருக்கும் ஒரு பாரிய குழியில் இருந்து, சாந்த சடலமாக மீட்கப்பட்டான்**

அடுத்த நாள் ஒன்பதாம் திகதி, பம்பரலகந்த பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 200 இளைஞர்கள், வெவள்வத்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார், இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் ஆகியோர் இணைந்து சாந்தையைத் தேடினார்கள். சாந்த கிடைக்கவில்லை; மூன்று நாள்கள் தொடர்ந்து தேடியுள்ளார்கள்; சாந்த கிடைக்க வில்லை.

நான்காவது நாள், சாந்த அடித்துச் செல்லப்பட்ட இடத்தில் இருந்து, சுமார் 500 மீற்றர் தூரத்தில் இருக்கும் ஒரு பாரிய குழியில் இருந்து, சாந்த சடலமாக மீட்கப்பட்டான்.

இவ்வாறு பாண்டி ஆற்றின் அந்தப் பிரதேசத்தில், ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு பல மரணங்கள் சம்பவித்துள்ளன. குறிப்பாக, சிவனொளிபாத மலைப் பகுதியில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமாக மழை பெய்தால், பாண்டி ஆறு பெருக்கெடுக்கும் தன்மையைக் கொண்டிருக்கிறது.

கவலைக்குரிய விடயம் என்ன வென்றால், இந்த ஆற்றை கடந்து வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்துள்ளனர், ஜூன் மாதம் எட்டாம் திகதி உயிரிழந்த 31 வயதுடைய சாந்தையும் 2013 ஆண்டு, அவருடைய தாத்தாவாகிய எஸ். எம் தர்மஸ்ரீயும்(வயது 60) 2005ஆம் ஆண்டு பெப்ரவாரி மாதம் நான்காம் திகதி சாந்தவின் மாமாவாகிய கே. ஜி. அஜித்தும் (வயது 29) என பாண்டி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்னர்.

ஒவ்வொரு மரணங்களின் போதும் அப்பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளுக்குப் பல தடவைகள் தெரிவித்துள்ளார்கள். “தமக்கு வாகனங்கள் ஓட்டிச் செல்லும் அளவில் பெரிய பாலம் தேவையில்லை; உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பாதங்களைக் கவனமாக வைத்துச் செல்வதற்கு, ஒரு கம்பிப் பாலத்தையாவது அமைத்துத் தாருங்கள்” என்பதாகவே இவர்களுடைய கோரிக்கை அமைந்திருந்தது. ஆனால், இதுவரையிலும் உரிய அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ இதற்கான ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

தேயிலை தோட்ட உரிமையாளர்கள், தேயிலை தோட்டத்தில் வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள், சுமார் 10 குடும்பங்களை சேர்ந்த அப்பிரதேச மக்களும் நாளாந்தம் ஆற்றை கடந்து பயணிக்கின்றார்கள். சுமார் 25 ஏக்கர் தேயிலை தோட்ட உரிமையாளர்கள் ஆற்றை கடந்து செல்வதாக, அத்தோட்ட மக்கள் தெரிவிக்கிறார்கள்.

பாண்டி ஆற்றை கடந்து செல்ல முடியாவிட்டால், பம்பரலகந்த பிரதேசத்தில் இருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் சென்று, வேறு வழிகளின் ஊடாகவே வர வேண்டும் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தார்கள்.

நாளாந்தம் கூலிவேலை செய்யும் பம்பரலகந்த தோட்ட மக்கள், பாண்டி ஆற்றை நாளாந்தம் கடந்தே வேலைக்குச் செல்கின்றார்கள். காலையில் வேலைக்குச் செல்லும் போது, அமைதியாக இருக்கும் பாண்டி ஆறு, அவர்கள் வேலை முடிந்து வீட்டுக்கு வரும்போது, பல தடவைகளில் பெருக்கெடுத்து காணப்படும். இதன்போது, வீட்டுக்குச் செல்லமுடியாமல் பல இன்னல்களை இவர்கள் சந்திப்பது பெரும் துன்பகரமானது எனவும் வெறுப்புடன் தெரிவித்தார்கள்.

அத்தோடு, தேயிலை தோட்டங்களுக்கு சென்று, தேயிலை பறித்து கொண்டுவரும் தொழிலாளர்களில் பலர், தேயிலை மூட்டைகளுடன் பாண்டி ஆற்றில் அடித்து சென்று விபத்துக்குள்ளான சம்பவங்களும் இடம்பெற்றள்ளன என பிரதேச தொழிலாளர்கள் தெரிவித்தார்கள்.



# கண்ணயரும் சோதனைச் சாவடிகளால் விழித்துகொண்ட 'சுக்கான்'கள்

தவறான தரவுகளால் பயணக்கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து, நீடிக்க வேண்டிய நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்ததென, ஒரு மாதத்துக்குப் பின்னர், ஜூன் 21ஆம் திகதியன்று, பயணக்கட்டுப்பாடுகளை தளர்த்தியபோது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தமையை யாரும் எளிதில் மறந்திருக்கமாட்டார்கள்.

பயணக்கட்டுப்பாடுகள் அமலிலிருந்த அந்த ஒருமாத காலப்பகுதியில், அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனங்களுக்கு குறைவே இருக்கவில்லை. பெருநகரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் அளவுக்கு, என்னதான் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தனவென கிண்டல் செய்யப்பட்டது.

சாதாரண பொதுமக்களும், கொரோனா தொற்று அடையாளம் காணப்படாத பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தனர். நாளைக்கு உலை வைப்பதா? இல்லையாவென நித்திரையை இழந்த நாள்களே அதிகமாகும். பயணக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் பின்னர் அப்பிரச்சினைகள் வெளிவரவில்லை.

ஆனால், அவற்றுக்கும் உலைவைத்து விடுவதைப்போலவே பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் அத்தியாவசிய தேவைகளைத் தவிர, மாகாண எல்லைகளை கடப்பது தடைசெய்யப்பட்டுள்ளது எனவும், மீறினால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். ஆனாலும், ஒன்றிரண்டல்ல, நான்கைந்து மாகாணங்களை கடந்து, டெல்டாவை தேடிவந்த அதிசொகுசு பஸ்கள் சிக்கிக்கொண்டுள்ளன.

மாகாண எல்லைகள் அமைக்கப்பட்டிருக்கும் சோதனைச் சாவடிகளில், இந்த பஸ்கள் நிறுத்தி சோதிக்கப்படவில்லையா? அதிசொகுசு எனும் நினைப்பில் இருந்துவிட்டனரா, இன்றேல், சோதனையில்லாத உள்வீதிகளின் ஊடாக இந்த பஸ்கள், டெல்டாவைத் தேடி கொழும்புக்குள் நுழைந்தனவா? என்பதெற்கெல்லாம் பொலிஸ் தரப்பே பதிலளிக்கவேண்டும்.

கொரோனா கட்டுக்கடங்காமல் போய்விடக்கூடாது என்பதற்காக, கண்விழித்து, தமது பணிகளை பொலிஸார் செய்திருந்தமையை எளிதில் மறந்துவிடக்கூடாது. ஆனாலும், அவர்களின் கண்களிலும் மண்ணைத்தூவிய சம்பவங்கள் பல நடந்தேறின. ஆனாலும் அதிசொகுசு பஸ்கள், பொலிஸாரின் கண்களுக்குள் மண்ணைத் தூவி பறந்தமை எவ்வாறு?

கட்டுப்பாடுகளுக்குள் புகுந்து 'சுளித்து' விடலாம் என்ற நினைப்பிருக்கும் வரைக்கும், கொரோனா அச்சமில்லாதவர்கள், இவ்வாறு சட்டங்களை மீறுவதை தவிர்க்கவே முடியாது. ஆகையால், சட்டங்களை இன்னுமின்னும் கடுமையாக்கி, மீறுவோருக்கு அதியுச்ச தண்டனையை பெற்றுக்கொடுக்கவேண்டும்.

இல்லையேல், நாட்டுக்குள் பயணக்கட்டுப்பாடுகள் மீண்டும் அமல்படுத்தப்படுவதை தவிர்க்கவே முடியாது. கொழும்பிலேயே டெல்டா கோரத்தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கின்றது. இன்னும் பத்துவாரங்களில், நான்காவது அலையொன்று உருவாகுமென சுகாதார தரப்பினர் எச்சரித்துள்ளனர். மூன்றாவது அலைக்கே தலைத்தூக்க முடியாதுள்ளது. ஆகையால், கட்டுக்கோப்புடன் இருக்க வேண்டியது, சகலரினதும் கடப்பாடாகும்.

ஒருசிலரின் கவனயீனம் காரணமாக, முழுநாடும் முடக்கப்பட்டுவிட்டால், மீண்டும் பயணக்கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டால், இன்றேல் பயணத்தடை விதிக்கப்பட்டுமாயின், ஒவ்வொருவரையும் அவை வாட்டியெடுத்துவிடும் என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளவேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# கண்ணை மூடிக் கொண்ட பூனைகள்



இல அதிரன்

ஒரு பதவிக்கு வந்துவிட்டால், நான் சொல்வதெல்லாம் சரி; நான் செய்வது மட்டுமே முழுமை; நானே எல்லாமும் என்ற எண்ணம், ஒரு சிலரைத்தவிர ஏனையோருக்கு வந்துவிடுகிறது. இதற்கு யாரும் விதிவிலக்கல்ல. மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராஜபுத்திரன் வியாழக்கிழமை(01) கூறிய "மட்டக்களப்பின் ஆளும் கட்சி சார்ந்த அரசியல்வாதிகளின் நிலையானது, குரங்கின் கையில் பூமாலை கிடைத்தது போன்று உள்ளது" என்ற கருத்துக்கும் இதற்கும் தொடர்புண்டு. இருந்தாலும் அது தலைகீழானது; இவருடைய இந்தக் கருத்து பெரியளவில் பேசப்படுவதாகவும் மாறியிருக்கிறது.

வியாழக்கிழமை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தார். அவரது வருகை தொடர்பில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. ஆனால், தான் அமைச்சரிடம் பேசியே வருகை தந்ததாக சாணக்கியன் தெரிவித்திருக்கிறார். இந்தப்பிரச்சினை புதிய அரசாங்கம் பொறுப்பேற்றது முதல் தொடர்கிறது.

ஆனால், வேறு மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அதற்கும் மேலாக அமைச்சர் சாணக்கியனை அனுமதிக்கும்போது, மட்டக்களப்பிலுள்ளவர்கள் ஏன் அழைக்கவில்லை என்பதுதான் கேள்வி. அழைக்காமல் ஏன் போகிறீர்கள் என்று பலரும் கேட்கத்தான் செய்கிறார்கள்.

"மட்டக்களப்பில் இடம்பெறுகின்ற முக்கிய கூட்டங்களுக்கு எங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. கூட்டமைப்பின் சார்பில் இங்கு நாங்கள் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றோம். எனினும் எங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. இதன் காரணமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரன் (ஜனா) வருகை தரவில்லை. மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படுதற்கு தேவையாகவுள்ள பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் குறித்து எங்களிடம் முன்மொழிவுகள் உள்ளன. எனினும் அவற்றினை முன்வைப்பதற்கு எங்களுக்கு சந்தர்ப்பங்கள் கிடைப்பது இல்லை. எங்களையும் கூட்டங்களுக்கு அழைத்தால் நாங்களும் முன்மொழிவுகளை முன்வைப்போம்" என்று சாணக்கியன் தெரிவித்திருக்கிறார்.

மாவட்டத்தினுடையதோ, மாகாணத்தினுடையதோ ஏன் நாட்டினுடையதோ, எதுவாக இருந்தாலும் பரஸ்பர கலந்துரையாடலுடன் நடைபெறும் பொழுது, அது பூரணமானதாக இருப்பதற்கும் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கும் வாய்ப்புகளை அதிகரிக்கும். இதனை யாரும் மறுக்கமாட்டார்கள். மட்டக்களப்பில் நடைபெற்றுவரும் இந்தத் 'திருடன் பொலிஸ் விளையாட்டுகள்' குறித்து, சில வாரங்களுக்கு முன்னர் எழுதிவிட்டோம். இருந்தாலும் தொடரும் உள்குத்தை ஞாபகப்படுத்தி வைப்பதில் தவறில்லை.

மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் சிலவிடயங்கள் தொடர்ச்சியாகவும் குற்றச்சாட்டுகளாகவே வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. அதற்கு நெருப்பின்மை காரணமல்ல; இருப்பதால் புகைகிறது என்பதே உண்மை. அதாவது மக்கள் தொடர்பான பொதுவான விடயங்களில் பிரச்சினைகளிலிருந்து ஆளும் தரப்பினர் ஒதுங்கியிருக்கின்றனர் என்பதே ஆகும்.

உண்மையில் நிரந்தரமான திட்டமிடலோ, திட்டமோ இல்லாது வருபவர், போபவர் எல்லோம் தான் நினைத்ததுபோன்றெல்லாம் எதனையும் செய்துவிடமுடியும் என்ற நிலையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒருவர் அமைத்ததை இடிப்பதும், கைவிடுவதும், புதிதாக ஒன்றை ஏற்படுத்துவதும் போன்றதான செயற்பாடுகள் நீண்டகால நோக்கில் அபிவிருத்தியாக அமையாது.

ஆளும் கட்சியினர் என்பவர்கள் குற்றச்சாட்டுகளை பொறுப்புடன் எதிர்கொள்ளப் பழகிக் கொள்வதே சிறப்பான அரசியலாக இருக்கும். 'துட்டனைக்கண்டால் தூர விலகு' என்பது போன்று, தீர்த்து வைக்கப்படவேண்டிய மக்களின் பிரச்சினைகளைக் கண்டு அரசியல் தரப்பினர் ஒழிந்து கொள்ள முடியாது. மாவட்டத்தின் மக்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால் அதற்காக நெருக்கு நேராக நின்று முட்டிமோதி, போராடி அவற்றினைத் தீர்த்து வைக்கவேண்டும். ஆனால் மட்டக்களப்பில் நடப்பது வேறு.

கிழக்குக்கென உருவாக்கப்பட்ட தொல்பொருள் ஜனாதிபதி செயலணி, மண் மாபியாக்களின் அளவுக்குமிஞ்சிய அகழ்வுகள், பிரதான தொழில் துறைகளில் ஒன்றான பண்ணைத் தொழிலுக்கான மேய்ச்சல்தரைப் பிரச்சினை, எல்லைப்பிரதேச அத்துமீறிய குடியேறல்கள், கடற்றொழிலாளர்களுக்குள்ள பிரச்சினைகள், காணி அத்துமீறல்கள், ஊழல், இனமுறுகல்கள் என அடுக்கிக் கொண்டே செல்லுமளவுக்கான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இருந்தபோதும் அவற்றை ஏறெடுத்தும் பார்க்காத ஆளும் கட்சி அரசியல்வாதிகள் மாவட்டத்தின் முன்னேற்றத்துக்கு எதனைச் செய்துவிடுவார்கள் என்பது எதிர்த்தரப்பினரது கேள்வியாக இருக்கிறது. இதனை நேருக்கு நேராகவும் சொல்லும் துணிச்சலும் அவர்களுக்கிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரைப்பிரச்சினை இப்போது அம்பாறை, பொலன்நறுவை என மேலும் இரண்டு மாவட்டங்களுக்குமான பிரச்சினையாக மாற்றமடைந்துள்ளது என்றால், அது கிழக்கு மாத்திரமல்ல, வடமேல் மாகாணமும் சம்பந்தப்பட்டதாக மாறியிருக்கிறது.

மணல் அகழ்வைப் பொறுத்தவரையில் மாவட்டத்திலுள்ள மக்களின் தேவைகளுக்குக் கூட மணல் பெறமுடியாத அளவுக்கு மாபியாத்தனம் ஒளிந்திருக்கிறது. மணல் ஏற்றுவதற்கு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதிலிருந்து விற்பனை செய்யும் வரைக்கும் இருக்கின்ற உள்விவகாரம் பேசிமுடியாது.

அண்மையில் பிரதேச செயலாளர் ஒருவரும் மணல் அனுமதிப்பத்திரப் பிரச்சினைகளாலேயே வம்பில் மாட்டிகொண்டதால் ம்பந்தப்பட்ட விவகாரம் சூடு பிடித்திருக்கிறது. மணல் ஏற்றிச் சென்ற ஒருவர் இரண்டு நாள்களின் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு மணல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரச் சிக்கல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தீர்த்து வைக்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கத்தினைப் பயன்படுத்துவதற்காகவே மட்டக்களப்பு மாவட்ட மக்கள் ஆளும் கட்சியிலும் அரசியல்வாதிகளைத் தேர்வு செய்திருக்கிறார்கள். இவ்வாறு மாற்றமும் கருத்தும் ஆளும் தரப்பினர் பக்கமே இருந்து கொண்டிருப்பது அவர்களைப் பலவீனப்படுத்துவதாகவே அமையும்.

கிழக்கின் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள மிக முக்கியமான பிரச்சினை, அம்பாறையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவாகாமைக்குரிய காரணமாக இருந்தது, கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகமாகும். அப்பிரதேச செயலகம் இன்னமும் தரமுயர்த்தப்படவில்லை.

தற்போதைய இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக புளொட் அமைப்பின் உறுப்பினராக இருந்த பொழுது உண்ணாவிரதங்களையும், போராட்டங்களையும் நடத்தினார். ஆனால் இப்போது அவரால் அது முடியவில்லை. பிரதேச செயலகத்தினைத் தரமுயர்த்தியும் கொடுக்க முடியவில்லை. ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பொழுது ஜனாதிபதி தெரிவாகி ஒருவாரத்தில் கல்முனை தமிழ்ப்பிரிவு தரம் உயரும் என்று முழக்கமிட்டார். ஆனால் நடந்தது வேறுகதை.

அடுத்தவர், விடுதலைப் புலிகளின் கிழக்கு பிராந்தியக் கட்டளைத் தளபதியாக இருந்து அவ் அமைப்பிலிருந்து பிரிந்து, அரசாங்கத்துடன் இணைந்து பிரதி அமைச்சரான கருணா எனும் வி.முரளிதரன், கல்முனை விடயத்தில் பல உறுதிப்பாடுகளைக் கூறியிருந்தார். ஒன்றும் நடைபெறவில்லை. அதற்கான துருப்புச் சீட்டை, முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏதோ ஒரு வகையில் வைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

தமிழர் அரசியலில் அரசாங்கத்துடன் தமிழ்ப்பிரதிநிதிகள் இணைவதும், தமிழர்கள் இணைந்து அமைச்சர்களாக இருப்பதும் ஒன்றும் வரலாற்றில் நடக்காத ஒன்றல்ல. இதுவும் கடந்தே போனதுதன் வரலாறு.

இருக்கும் வரைக்கும் இருப்போம் முடிந்தவரைக்கும் உழைப்போம். ஏதோ காலம் கடத்துவோம் என்று வாழும் அரசியல் வாழ்க்கைக்குப் பெயர் ஆளும் கட்சியென்றால் மகிழ்ச்சி கொள்வோம். தம்மால் முடியாமல் போனதற்கு தமிழ்த் தேசிய தரப்பு மீது குற்றச்சாட்டுவேறு.

தொல்பொருள், வனப் பாதுகாப்பு என்ற வகையில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகள் கொழும்பிலிருந்தபடியே தொழில்நுட்பத்தின் மூலம் அடையாளமிடும் அதிகாரிகள், அவ் இடங்களுக்கு விஜயம் செய்து தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. இது தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்குவதாகும்.

இவ்வாறான வேலைத்திட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு கொரோனா, தனிமைப்படுத்தல் எவையும் எதுவும் செய்துவிடுவதுமில்லை. அதுபோலவே, பயணக்கட்டுப்பாடும்!

ஆனால், மணல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுக்கொண்டேதான் இருந்தன. அக்காலத்தில் அகழப்பட்ட மணல் எங்கே சென்றது என்பது கேள்வி.

யானை உண்ட விளாம்பழம் ஒரு சிறுதுளையுடன் உள்ளே எதுவுமற்று இருப்பதுபோல், தமிழர் பிரதேசமும் அவ்வாறே உள்ளீடுகள் எதுவும் அற்று வெறும் கோதாகும் கைங்கரியங்களே அரங்கேறுகின்றன.

எதற்கும் கையேந்தும், பொருளாதாரம் அழிந்த மக்கள் கூட்டமாக அரசியலை நடத்தி, மலையைப்பார்த்து நாய் குரைத்தால் நமக்கென்ன என்று கேட்கின்ற அரசியலை நடத்துவதில் பயன் என்ன என்பதுதான் பொதுப்படைக் கேள்வி.

மாவட்டத்தின் காலங்காலமாக இருக்கின்ற பொதுவான பிரச்சினைககளைத் தீர்த்து வைப்பதற்கு, மட்டக்களப்பின் அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் முயலவேண்டும்; முடித்தும்வைக்கவேண்டும்.

மக்களின் பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதனைத் தவிர்த்து, கண்களை மூடிய பூனைகளாக இருக்க முயல்வதற்குப் பெயர் ஆளும் கட்சி அரலசியலா? ஆளும் அரசியலா என்பது, மக்கள் மற்றும் அரசியல் தரப்பினுடைய கேள்வியாகும். இதற்கான பதில் விரைவுபடுத்தப்படட்டும்.



## வாழ்வியல் தரிசனம்

உலக இன்பங்களை எல்லாம் அடைவதற்காக சேமித்த செல்வங்களைச் செலவு செய்து, இறுதியில் நடுத்தெருவுக்கு வரும் நபர்கள் ஏராளம். எல்லாவற்றுக்கும் ஓர் எல்லையுண்டு.

காசைச் செலவுசெய்து பெறும் சந்தோசங்கள் நிஜமானது அல்ல. தர்ம வழியில் சம்பாதித்தால் தவறான வழியில் நடக்க மாட்டார்கள்.

வீம்புக்காகச் செலவு செய்பவர்கள் உழைக்கும் பணத்துக்கு மேலாகக் கடன்பட்டு, தங்களைச் செல்வந்தர்களாகக் காட்டுகின்றார்கள்.

அத்துடன் கெட்ட சகவாசம், தெரியாத தொழில்களில் முதலீடு செய்வது, கடன்கள் போன்றவற்றால் குடும்பத்தில் முரண்பாடு போன்றவைகளால் மனிதர்கள், தங்களது மகிழ்ச்சியான வாழ்வைத் தொலைத்து விடுகின்றார்கள். இது பரிதாபகரமானது.

ஆனால், எவரும் தமக்குத்தான் எனப் பரிதாபப்படக் கூடாது. அது கோழைத்தனம்.

ஆறறிவு படைத்த மனிதன் தன்னை மறந்து உண்மைகளை அறியமறுத்து அல்லாடுவது, பெரும் அவமானத்தைப் பெற்று விடுகின்றது. அறியாமை எனும் இருளில் இருந்து விடுபட முடியும். எதுவும் புதிதல்ல; நடக்காதது எதுவும் இல்லை; எனவே, எழுக; வெல்க!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### உயிலங்குளம் அணைக்கட்டை புனரமைக்கவும்



முல்லைத்தீவு, உயிலங்குளத்தின் அணைக்கட்டு நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிலங்குளம் அணைக்கட்டு வழியாகவே போக்குவரத்துகள் நடைபெற்று வந்த நிலையில், அணைக்கட்டில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சேதம் ஏற்பட்டது. துணுக்காய் கமநல சேவை நிலையமும் விவசாயிகளும் இணைந்து மண் மூடைகள் அடுக்கி குளத்தை உடைப்பெடுக்காமல் பாதுகாத்தனர். வருங்காலத்தில் அணைக்கட்டைப் பாதுகாப்பது என்றால் அணைக்கட்டின் கீழாக வீதியை உருவாக்குதல் முக்கியமாக திட்டமிடப்பட்டது. ஆனால் எந்தவிதமான வேலைத் திட்டங்களும் இதுவரை நடைபெறவில்லை.

துணுக்காயில் இருந்து உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைக்கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் என்பவற்றிற்கு இவ் அணைக்கட்டு வழியாகவே தற்போதும் போக்குவரத்து நடைபெறுகின்றது.

துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் வீதியினை உருவாக்குவோம். அணைக்கட்டினை புனரமைப்போம் என்ற அதிகாரிகள், இதுவரை வேலைகள் தொடங்கவில்லை.

வீதி அமைக்கப்படாததன் காரணமாகத்தான் குளத்தின் அணைக்கட்டு வேலைகளும் முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் கிராம விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

# நாவை நீட்டக் கூடாது


இளங்கோ பாரதி
ilangobharathy727@gmail.com

உடல் உறுப்புகளில் மிக முக்கியமான உறுப்பாகவும், ஓர் ஈரப்பதனுடன் வைத்திருக்கப்படும் உறுப்பாகவுமே நாக்கு (நா) இருக்கிறது. நாவடக்கம் பற்றி கேள்விப்பட்டிருப்போம், சில இடங்களில் வாயைத் திறக்காமல் இருந்திருந்தாலே பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

இன்னும் சில இடங்களில், நாவும் எச்சிலும் ஆகக் கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றன. தபாலகங்களில் முத்திரை ஒட்டுவதற்கும், கடிதவுறையை ஒட்டுவதற்கும், ஏன், பத்திரிகையொன்றை இரண்டாக கிழிப்பதற்கும் எச்சிலே பயன்படுத்தப்படுகின்றது. ஆரம்ப காலங்களில், ஏதாவது தவறாக எழுதிவிட்டால், ஆசிரியருக்குத் தெரியாமல், எச்சில் தொட்டு அழித்தமையும் பலருக்கும் ஞாபகத்துக்கு வரலாம்.

இந்தக்காலத்தில், வாயையும் மூக்கையும் மறைத்தாற்போல, முகக்கவசங்கள் அணிந்திருப்பதால், வீணான வம்புகள் மட்டுமல்ல, பொது இடங்களில் எச்சில் கிடப்பதை கூட காண்பது அரிதாக இருக்கிறது. ஏன்? கண்களை மூடிக்கொண்டு நடக்கலாம். அந்தளவுக்கு எச்சில் தொல்லை வீதிகளில் இல்லை.

உலகம், இதுவரையிலும் இரண்டு மகா யுத்தங்களை சந்தித்திருந்தாலும், கொரோனாவுடன் மற்றுமொரு யுத்தம் இன்னுமே நிறைவுக்கு கொண்டுவரப்படவில்லை. 'இரண்டாம் உலகப் போரில் மாத்திரம் இறந்தோரின் எண்ணிக்கை முப்பத்தேழு மில்லியனாக இருக்கலாம்' என ஆய்வறிக்கையொன்று கூறுகிறது. இந்த எண்ணிக்கைத் தாண்டலாம் என்ற அச்சத்தை நாளாந்தம் கொரோனாவால்'பலியாவோர் எண்ணிக்கை எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை கொரோனாவால் பலியானோரின் எண்ணிக்கை நாற்பது இலட்சத்தை நெருங்கியுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. தவிரவும் தினம் தினம் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகி வருகின்றனர். இந்த அனர்த்தத்திலிருந்து உலகைப் பாதுகாக்க உலகளாவிய ரீதியில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் மிக முக்கியமானது தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகும். இன்று உலகளாவிய ரீதியில் தடுப்பூசி வழங்கப்பட்டு இந்நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும்கூட இந்நோயை வெற்றி கொள்ளும் நிலைக்கு உலகம் இன்னும் வந்துவிடவில்லை.

'மழை விட்டாலும் கூட வெள்ளம் வடிந்த பாடாக இல்லை' என்று கூறப்படும் நிலையிலேயே கொரோனா அச்சுறுத்தல் காணப்படுகிறது. தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் துரிதமடைந்துள்ள இன்றைய நிலையில், இந்தியா போன்ற நாடுகளில் ஏன் இலங்கையிலும்கூட இதன் தாக்கம் அதிகரித்துள்ளமை மேற்குறிப்பிட்ட வாக்கியத்தை எமக்கு நினைவூட்டுவதாகவே உள்ளது.

'கொரோனா' ஆரம்பகாலங்களில் முதியோர்களைக் குறிவைத்துக் கொன்று குவித்தது. இன்று இளையோர்களும் சிறார்களும் கூட வயது வித்தியாசமின்றி இதன் உக்கிரத்துக்குப் பலியாகி வரும் நிலையில், விலங்குகளும் இத்தொற்றுக்கு ஆளாகியிருப்பது மிகவும் பாரதூரமானதொன்றாகும். எமது நாட்டில் மிருகக்காட்சி சாலையில் உள்ள சிங்கங்கள் சிலவற்றுக்கும் வௌவால்களுக்கும் இந்நோய் பரவியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளமை பீதியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தமிழகத்திலிருந்து வெளிவந்த செய்தியொன்று எமது கவனத்தை ஈர்த்துள்ளது.



தமிழகத்தில் கடந்த மார்ச் மாதத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்தமையைத் தொடர்ந்து தமிழக அரசின் சுகாதாரத்துறையினர் உணவகங்களில் உணவைப் பொதிசெய்யும் நடவடிக்கைகளுக்காக, உணவைப் பொதிசெய்யப் பயன்படுத்தும் கடதாசிகளை எச்சில் தொட்டுப் பிரிக்கக் கூடாது என்றும் பைகளை ஊதிப் பிரிக்கக் கூடாது என்றும் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளதோடு இத்தடை உத்தரவை மிகவும் இறுக்கமாகக் கடைப் பிடித்து வருகின்றனர்.

நகரங்களில் உள்ள அனைத்து உணவகங்களும் கண்காணிக்கப் பட்டு மீறுவோர் சட்டத்தின் முன்னே நிறுத்தப்படுகின்றனர். இதற்கான மிக முக்கியமான காரணம் 'கொரோனா' எச்சில் மூலமாகப் பரவுவதே. இக் காரணத்தாலேதான் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் அறிவோம். இந்நிலையில் உணவகங்களில் மேற்கொள்ளப்படும் மேற்குறித்த நடவடிக்கைகளால் தொற்றுத் தீவிரமாகும் வாய்ப்புகள் அதிகமுள்ளமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மூடப்பட்ட அறைக்குள் இருக்கும் 'கொரோனா' நோயாளி ஒருவர் ஒரு நிமிடத்திற்குச் சத்தமாகப் பேசினால் அவரது எச்சிலிலிருந்து வெளியேறும் கொரோனாக் கிருமிகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமாகும் என்றும் அவை நீண்ட நேரம் வரை உயிர்வாழும் என்றும் கண்டறியப்பட்டுள்ள நிலையில், மக்களைப் பாதுகாக்கத் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்குறித்த நடவடிக்கையினை எமது நாட்டிலும் கடைப்பிடிப்பது பொருத்தமானதொன்றாக இருக்கும்.

தமிழகத்தில் மாத்திரமல்ல எமது நாட்டிலும் கூட தற்போதைய நெருக்கடி நிலையில் உணவகங்களிலிருந்து உணவைத் தருவித்து உண்ணும் பழக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக நகரப் புறங்களில் இவ்வாறான நடைமுறை காணப்படுகிறது. பயணத்தடை அமலில் இருந்துவரும் காலங்களில் கூட, வெதுப்பகங்கள் தம் பணியைத் தொடர அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மக்கள் உணவுப் பொருட்களை வீட்டிலிருந்தே பெற்றுக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 'பொதிசெய்தல்' என்பது தவிர்க்க முடியாததொன்றாக மாறிப் போய் உள்ளது. எனவே இவ்விடயத்தில் எமது கவனத்தைக் குவிக்க வேண்டியது அவசியமாகிறது.

'கொரோனா' காவிகள் எவரென்பது பலராலும் அறியப்படுவதில்லை. எமது கண்ணுக்குத் தெரிந்த, மற்றும் தெரியாத அந்த நபர் குறித்த எச்சரிக்கையுடன் நாமனைவரும் செயற்படவேண்டும் என்பது கட்டாயமாகும். உணவகங்களில் கூட்டமாகச் சென்று உணவுண்பது தவிர்க்கப் பட்டுள்ள போதிலும் சமைத்த உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதென்பது நிறுத்தப் படவில்லை. இந்த உணவகங்களின் சுகாதார நிலைமைகள் என்ன? இங்கு பணியாற்றும் ஊழியர்கள் இச்சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றுகின்றனரா? போன்ற விடயங்கள் கண்காணிக்கப் படவேண்டியது அவசியமாகும்.

மேலும் இவ் உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சமூகப் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டியது கடமையாகும். பொதுமக்களைப் பொறுத்தவரை கூடிய பட்சம் வெளியிடங்களிலிருந்து உணவைப் பெற்று உண்பதைத் தவிர்த்துக் கொள்வது சிறப்பானதாகும்.

இன்று அனைவரும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் பயன்படுத்தப்படும் முகக்கவசம் குறித்த விழிப்புணர்வு இன்னும் பரவலாக மக்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மையாகும். எமது நாட்டில் மக்கள் அவரவர் பொருளாதார நிலைக்கேற்றவாறு பல்வேறு விதமான முகக்கவசங்களை அணிகின்றனர்.

அங்ககரிக்கப்பட்ட முகக்கவசங்களை அணிவோரும் அவற்றைச் சரியான விதத்தில் அணிகிறார்களா என்றால் அதுவும் இல்லை. சரியாக அணிவோரும் தமக்குத் தெரிந்தவர்களோடு உரையாடும் சந்தர்ப்பங்களில் முகக்கவசத்தை நீக்கியபடி பேசுவதை நாம் அவதானித்திருப்போம். இது ஆபத்தானது என்ற உண்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

முகக்கவசங்களைப் பயன்படுத்திய பின்னர் அவற்றைச் சரியான விதத்தில் அகற்றுவதிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. சிலர் கண்ட கண்ட இடங்களில் அவற்றை வீசி எறிவதையும், விட்டுச் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது. இதனால் இதனை உண்ணும் விலங்குகளும் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் அண்மைக்காலத்தில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப் படும் பட்சத்திலேயே முகக் கவசங்களை அணிவதால் ஏற்படக்கூடிய பலாபலன்களை நாம் பெற்றுவிட முடியும்.

'கொரோனாத் தொற்றை அதிகரிக்கக் கூடிய மற்றொரு விடயம் காசைத் தொட்டுக் கையாள்வதாகும். பெருமளவில் பணம் புழங்கும் இடங்களில் அவற்றை எண்ணிக் கணக்கிடுவதற்கு இலகுவாக எச்சிலைத் தொட்டு எடுக்கும் பழக்கம் மிக நீண்ட காலமாக இருந்துவருகிறது. இது கிருமித் தொற்றை அதிகரிக்கக் கூடிய ஒன்றாக இருப்பதால் இப் பழக்கத்தை சம்பந்தப்பட்டோர் நிறுத்துவது அவசியமாகும்.

பணம் கைமாறிச் செல்லும் ஒன்று. எனவே பணத்தைக் கையாள்வோர் கொடுக்கல் வாங்கல் செய்து முடித்த பின்னர் கைகளைத் தொற்று நீக்கி கொண்டு சுத்தப்படுத்துவது மிகவும் அவசியமாகும். இத்தொற்று நீக்கியானது அறுபது வீதம் அல்ககோல் கொண்டிருந்தால் மாத்திரமே முழுமையான பயனுள்ளதாக இருக்கும்.

எனவே சந்தையிலுள்ள தொற்று நீக்கிகளைக் கொள்வனவு செய்யும்போது இதனைக் கவனித்து வாங்குவது பயனுள்ளதாகும். இவ்வாறான கிருமிநாசினிகளைக் கொள்வனவு செய்து பயன்படுத்த முடியாதவர்கள் எளிதில் கிடைக்கக்கூடிய சவர்க்காரங்களைப் பயன்படுத்தி கைகளைக் கழுவிக் கொள்வது அவசியமாகும்.

சட்டங்கள் எவ்வளவுதான் இறுக்கமானவையாக இருந்தாலும் அவற்றின் பலாபலன்களை அனுபவிப்பதென்பது மக்கள் அனைவரினதும் பொறுப்புடனான நடவடிக்கைகளிலேயே தங்கி உள்ளது.

# கல்வி ஒருவருக்கு இல்லையெனில்...


வ. சக்தி
shagthivel@gmail.com







மட்.பட்.மண்டூர் - 14 சக்தி மகாவித்தியாலய மாணவி அ.டிசா தெரிவிக்கையில் "சூம் தொழில் நுட்பத்தின் மூலம் எமது கற்றல் நடவடிக்கைகள் தொடர்கின்றன. ஆனால் எமக்கு இப்பகுதியில் கவறேஜ் இல்லாமலுள்ளது. இதனால் எமது அலைபேசி மூலமான கற்றல் தெளிவில்லாமல் உள்ளது" என்கிறார்.

"நான் 9 ஆம் ஆண்டில் கல்வி கற்கின்றேன். சூம், வட்ஸ்அப் ஆகியவற்றின் மூலம் வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆனாலும் ஆசிரியர்கள் அனும்பும் நோட்ஸை பார்ப்பதற்குக்கூட அலைபேசிகளுக்கு முறையாக கவறேஜ் கிடைப்பதில்லை" என ந.சுகேஷன் கூறுகின்றார்.

"எமது கிராமத்தில் கல்வியில் ஆற்றலுள்ள மாணவர்கள் உள்ளார்கள். ஆனால், கவறேஜ் இல்லாததால் பாடங்கள் சரியாக விளங்குவதில்லை. ஆசிரியர்கள் அனுப்பும் பாடவிதானங்கள்கூட கிடைப்பது கடினமாகவுள்ளது. இதற்கு அரசாங்கம் எமது பகுதியில் அலைபேசிகளுக்கு, கவேறேஜ் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தம்பலவத்தை கிராமத்தைச் சேர்ந்த மாணவனான எஸ்.தீபன் தெரிவிக்கின்றார்.

இவை தற்கால கொரோனா சூழலில், 'சூம்' மூலம் தமது கல்வியைத் தொடர முடியாமல் தவிக்கும் மாணவர்களின் எண்ணக் குமுறல்களாகும்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை' அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது, கல்விச் செல்வமே; மற்றைய பொன், பொருள், மண் என்னும் செல்வங்கள் ஒருவனுக்குச் சிறந்த செல்வம் ஆகாது எனப் பொருள் படுகின்றது.

இவ்வாறான கல்வியை, மாணவர்களுக்கு சிறு பராயத்திலிருந்து பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்கத் தவறவிடுவோமாக இருந்தால் அது நாம் ஒவ்வொருவரும் சமூகத்திற்குச் செய்யும் பாரிய துரோகம் ஆகும்.

ஆனாலும் தற்போதைய காலகட்டத்தில் கொவிட் -19 உலகையே உலுக்கிக் கொண்டிருக்கின்ற இந்நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளமை ம(றை)றுத்துவிட முடியாத ஒன்றாகும்.

எனினும் கல்விச் சமூகத்தின் ஆலோசனைக்கமைவாக ஆசிரியர்கள், வீடுகளிலிருந்தவாறே தத்தமது மாணாக்கர்களை வழிப்படுத்தி வருவதையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு எச்சந்தர்ப்பத்திலும், தமது மாணாக்கர்கள் கல்வியில் பின்தள்ளப்படக் கூடாது என்பதற்காக ஆசிரியர்கள் செயற்படும் விதம் வரவேற்றத்தக்கதோடு பாராட்டத்தக்கதாகும்.

எனினும் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பெரு நிலப்பரப்புக்குட்பட்ட போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் எல்லைப்புறங்களிலுள்ள கிராமங்களில் சாதாரண அலைபேசி அழைப்புகளைக்கூட விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் 'சூம்' செயலி மூலமான கற்றலை எவ்வாறு மேற்கொண்டு செல்வது என அப்பகுதி மாணவர்களும், பெற்றோரும் அங்கலாய்க்கின்றனர்.

தற்காலத்தில் சூம் மூலமான கற்றலால் பெரிதும் பாதிக்கப்படுவது அப்பகுதி மாணவர்களேதான். இவ்வாறான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, அப்பகுதி மாணவர்களின் தற்கால கற்றலை முன்கொண்டு செல்வதற்கு கல்விச் சமூகம், துறைசார்ந்த அதிகாரிகள் அனைவரும் அலைபேசி வலையமைப்புகளை உடன் தொடர்பு கொண்டு கவறேஜ் வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க அல்லது விஸ்தரிக்க, முன்வரவேண்டும் என அப்பகுதி மாணவர்களும் பெற்றோரும் எதிர்பார்க்கின்றனர்.

"எனக்கு 2 பெண்பிள்ளைகள். பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள்; எனது கணவரும் சுகவீனமுற்றிருக்கின்றார். எமது பிள்ளைகளை தற்காலத்துக்கு ஏற்ற வகையில் கற்பதற்கு ஏற்ற வகையில் அலைபேசி இல்லை. எமக்கு உதவுவதற்கு யாருமில்லை; யாராவது மனமிரங்கி எமக்கு உதவிடுமாறு வேண்டுகின்றேன்" என போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் சங்கர்புரம் கிராமத்தைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் தெரிவிக்கின்றார்.

"பெற்றோர் கூலிவேலை செய்து தமது பிள்ளைகளைக் கற்பித்து வரும் இந்நிலையில், குடும்பத்திலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் தலா ஒவ்வொரு திறன்பேசிகளை வாங்கிக் கொடுப்பதற்குரிய வசதிவாய்ப்புகள் இல்லை. அவர்களின் வாழ்க்கைச் செலவை கொண்டு செல்லமுடியாத இச்சூழலில் திறன்பேசிகள் வாங்குவதென்பது முடியாத விடயமாகும். இதனால் இக்காலப்பகுதியில் எமது பகுதி மாணவர்களின் கல்வி நிலைமை பெரிதும் பாதிப்படைகின்ற இந்நிலையில், தொழில் நுட்ப ரீதியில் சூம், வட்ஸ்அப் ஊடாக பிள்ளைகளைக் கற்பிக்கலாம் என நினைத்தால் அதுவும் முடியாமலுள்ளது. எனவே எமது பிள்ளைகளின் எதிர்காலம் கருதி தற்கால கொரோனா சூழலையும் கருத்திற் கொண்டு அபேசிகளுக்குரிய கவறேஜ் வசதிகள், அல்லது வேறு தொழில் நுட்பங்கள் ஊடாகவேனும் கல்வியைத் தொடர அதிகாரிகள் முன்வர வேண்டும்" எனத் தெரிவிக்கின்றார் மண்டூர் பகுதியிலுள்ள சமூகசேவகரான ப.கோணேஸ்வரன்.

"தற்போதைய கொவிட்-19 காலத்தில் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் காணப்படுகின்றன. இந்நிலையில் மாணவர்களின் நலன் கருதி சூம் வகுப்புக்கள் ஆசிரியர்களால் நடைபெற்று வருகின்றன. அது வரவேற்கத்தக்க விடமாகும். ஆனாலும் பின்தங்கிய பல பகுதிகளில் வாழும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பில் இந்த சூம் வகுப்புகள் மூலம், முழுமையாக கிடைக்கின்றதா என்பது கேள்விக்குரிய விடயமாக இருக்கின்றது.

ஏனைய பகுதிகளைவிட குறிப்பாக போரதீவுப்பற்றுப் பிரதேசத்திலுள்ள றாணமடு, சங்கர்புரம், கணேசபுரம், சின்னவத்தை, காக்காச்சிவட்டை, பலாச்சோலை, பாலையடிவட்டை, கண்ணபுரம், தும்பங்கேணி, நவகிரிநகர், செல்லாபுரம், சுரவணையடியூற்று, தம்பலவத்தை, வேத்துச்சேனை, இளைஞர் விவசாயத்திட்டம், களுமுந்தன்வெளி உள்ளிட்ட பல கிராமங்களில் இவ்வாறு முறையாக அலைபேசிகளின் மூலம் உரையாடுவதற்கு கவறேஜ் கிடைக்காத நிலையில் எவ்வாறு சூம் செயலி மூலம் மாணவர்கள் கல்வி கற்பது?

மாறாக, இந்த எல்லைப் புறக்கிராமங்களில் மிகவும் திறமையான மாணவர்கள் உள்ளார்கள் கடந்தமுறை கல்விப் பொதுத்தர சாதாரண தரப் பரீட்சையில் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்ற மாணவர்களும் கல்வி பொதுத்தர உயர் தரத்தில் சித்தி பெற்று மருத்துவக் கல்லூரிக்குச் சென்ற மாணவர்களும் அப்பகுதியில் உள்ளார்கள். அவ்வாறான மாணவர்களின் கல்வி தற்போது சீரின்மையாகக் காணப்படுகின்றது.

இருந்த போதிலும் இதனைத் திறம்படக் கொண்டு செல்வதாயின் இதனை சில மாற்றங்களோடு சில வேறுபட்ட முறைகளிலும் நடத்திச் செல்லலாம். தனவந்தர்கள், செல்வந்தர்கள் வறுமை நிலையிலுள்ள கல்வி கற்கும் பிள்ளைகளையுடைய குடும்பங்களுக்கு ஒரு திறன்பேசியை வாங்கிக் கொடுக்கலாம். பொதுவான கணினி வள நிலையங்களை உருவாக்கி அதிலே மாணவர்களை சிறு சிறு குழுக்களாக உருவாக்கி, அதனூடாக மாணவர்களின் கற்றலை மேற்கொண்டு செல்லலாம், அதுபோல் பாட விதாங்கள், கற்பித்தல் விடயங்களை போட்டோ பிரதிகள் எடுத்து மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் மாணவர்களின் கற்றலை முன்கொண்டு செல்லலாம். மாணவர்களிடத்தில் நேரில் சென்று கற்றல் விளக்கங்களை வழங்கலாம். இவ்வாறு செய்தால் தடைப்பட்டிருக்கின்ற கல்வியை ஒரளவுக்கேனும் முன்கொண்டு செல்லலாம். எனவே, இவ்விடங்களைக் கருத்திற் கொண்டு சம்மந்தப்பட்டவர்கள் பின்தங்கிய பகுதிகளிலுள்ள மாணவர்களின் நலன் கருத்தி செயற்பட முன்வர வேண்டும்" என பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மூத்தையா விமலநாதன் தெரிவிக்கின்றார்.

முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் கருத்து இவ்வாறு அமைந்தாலும், ஏனைய மாவட்டங்களில், நனசல, கணினி வள நிலையம், போன்ற பல வசதி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும், இவ்வாறு மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்கள் மீதும் துறைசார்ந்தவர்கள் கரிசனை கொண்டு ஆங்காங்கு இணையத்தள வசதிகளுடன் கூடிய கணினி வள நிலையங்கள் உள்ளிட்ட பல வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் அதனூடாகவேனும் தற்காலத்தில் எதிர்கொண்டுள்ள கொரோனா அச்சத்தின் மத்தியில் மாணவர்கள் தமது கற்றலைத் தொடர முடியும்.

போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் எல்லைப் புறங்களிலுள்ள மாணவர்களும், ஏனைய பகுதி மாணவர்களைப்போல் தங்கு தடையின்றி தற்காலத்திற்கு ஏற்ற வகையில் தொழில்நுட்ப ரீதியில் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உந்துசக்தியளிக்க, அங்குள்ள தடைக்கற்களை தகர்த்தெறிய அனைவரும் முன்வர வேண்டும் என்பதுவே அப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும்.



# ஒரு கிராமத்தின் சொல்ல மறந்த கதை

நூருல் ஹுதா உமர்
umarhutha@gmail.com

கடலையும் வயலையும் மலையையும் மட்டுமல்ல, ஆங்காங்கே வறுமையின் கொடூரங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது அம்பாறை மாவட்டம். அப்படி மிகப்பெரும் துயரம் நிறைந்த, மிக மோசமான நிலை கொண்ட ஊராக 'கொக்கிளான்கால்' கிராமம் காணப்படுகின்றது.

நான்கு மதப்பிரிவினரும் வாழும் இறக்காமம் பிரதேச செயலகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட 7ஆம் கிராம சேவகர் பிரிவிலுள்ள 'அரபா நகர்' என்ற ஊரே இவ்வாறு 'கொக்கிளான்கால்' என்று அழைக்கப்படுகிறது. குளத்தோரம் என்பதால், கொக்குகளின் வருகை அதிகம் என்ற காரணப் பெயராக, இந்தப் பெயர் ஊருக்கு வந்ததாக இங்கு வாழும் முதியவர்கள் கூறுகிறார்கள்.



ஒருமனிதன் வாழத் தேவையானவற்றில், இயற்கை பரிசாகக் கொடுத்த தூய காற்றை தவிர, எவ்வித அடிப்படை வசதிகளும் இங்கில்லை.

பிரதான பாதையிலிருந்து, பல கிலோ மீற்றர் குண்டும் குழியுமான பாதையூடாக, பல நெளிவு சுளிவுகளுடன் இந்த ஊரை நோக்கிச் செல்லும் போதே, ஊரின் அவலநிலை துயரத்துடன் வரவேற்கும்!

உச்சி வெயிலில் பாலைவனம் போன்று காட்சியளித்த இந்த பிரதேசத்தில், ஓட்டு வீடுகள் கண்ணில் படவேயில்லை. தென்னை ஓலைகளால் வேயப்பட்ட வீட்டுக் கூரைகளும் கம்புகள் படங்குகள், கிடுகுகள், தகரங்கள் போன்றவற்றால் மறைக்கப்பட்ட இருப்பிடங்களும் கிராமத்தின் வறுமையைக் காட்சிப்படுத்துகின்றன. இந்தக் குடில்களும், சாதாரணமாக ஒருவர் நிமிர்ந்து நிற்க முடியாத அளவுக்கு உயரம் கொண்டவையாகவே அதிகம் காணப்படுகின்றன.

36 குடும்பங்கள் வாழும் கொக்கிளான்கால் ஊரில், 150 பேரளவில் வசிக்கிறார்கள். வேளாண்மையும் கூலியும் ஆற்று மீன்பிடியுமே இவர்களது பிரதான தொழில்களாக இருக்கின்றன.

தங்களின் இருப்பிடங்களுக்கு மின்சார வசதி இல்லை என்று கூறும் மக்களின் வீடுகளுக்கு நீரிணைப்புகளும் இல்லை. குடிநீரைப்பெற மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ரஹ்மத் நகர் பள்ளிவாசலுக்கு அல்லது, நூர் பள்ளிவாசலுக்கு சென்றே குடிநீரை பெற்று வருவது ஏழைத் தாய்மாருக்கு மேலதிக சுமையாக இருக்கிறது.

தமது இதர தேவைகளுக்காக 'பூவல்' எனப்படும் நிலக்கீழ் நீரைப் பாவிக்கும் இந்த மக்களுக்கு, அதன் மூலம் ஏற்படும் நோய்கள், உயிராபத்துகள் பற்றி எவ்வித அறிவும் இல்லாமல் இருப்பதும் வேதனையான ஒன்றே! 6-7 அடி ஆழம் கொண்ட 'பூவல்' எனப்படும் நிலக்கீழ் நீர்நிலையானது, எவ்வித பாதுகாப்புமின்றி நிலமட்டத்திலையே உள்ளது. இதனால் சிறுபிள்ளைகள் மாத்திரமின்றி, இருள் சூழ்ந்த பொழுதுகளில் பெரியவர்களும் உயிராபத்துடனே வாழ்கிறார்கள்.

சுகாதாரமான முறையில் கழிப்பிடவசதி இருக்க வேண்டும் எனும் சாதாரண மனிதனின் தேவைகூட இங்கு இல்லை. வயதுவந்த பெண்பிள்ளைகள் இங்கு வாழ்வதில் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகள் ஏராளம் என்கிறார் ஒரு தாய். சுகாதாரமற்ற கழிவறைகளைப் பயன்படுத்தும் இந்தக் கிராம மக்களுக்கு, உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தும் சுத்தம், சுகாதாரம் நிறைந்த கழிவறை எப்போது கிடைக்கும்?



இந்தப் பிரதேசத்தில் இருந்து கல்விகற்க பாடசாலைக்கு செல்லவேண்டுமாக இருந்தால், இறக்காமம் பாடசாலை 10 கிலோ மீற்றர் தொலைவிலும், வரிப்பத்தான்சேனை பாடசாலை 07 கிலோ மீற்றர் தொலைவிலும், குடுவில் பாடசாலை 04 கிலோ மீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளன. இந்தத் தூரத்தை நடந்தே செல்ல வேண்டியுள்ளதாகப் பெற்றோரும் மாணவர்களும் தெரிவிக்கின்றனர். "ஆசையாய்ப் பாடசாலை செல்லும் எங்களுக்கு, நடந்து செல்லும் களைப்புத் தீரவே பல மணித்தியாலயங்கள் எடுக்கிறது. அதனால் ஏற்படும் சோர்வால் ஒழுங்காகக் கல்விகற்க முடியாமல் இருக்கிறது. எங்களைப் பாடசாலைக்கு அனுப்புவதில் பெற்றோர் தினமும் பலசிக்கல்களைச் சந்திக்கின்றனர்" என்றும் இங்குள்ள மாணவர்கள் தெரிவித்தனர்.

பாடசாலை செல்லும் போது, முதலைகள், விசம்கொண்ட பல ஊர்வனவற்றின் உயிரச்சுறுத்தல் இருப்பதாகவும் இப்போது பாடசாலைகள் நடைபெறாத நிலையில் எவ்வித கல்வி நடவடிக்கையும் இல்லாமல் பெற்றோருக்கு உதவியாக இருந்துவருவதாகவும் இந்த மாணவர்கள் தெரிவித்தார்கள். இந்த நிலைமைகளால், சிறுவர் தொழிலாளிகள் அதிகரிப்பார்களா? சிறந்த கல்விமான்கள் உருவாக்குவார்களா? எனும் கேள்வி எழுகிறது.

இரவில் பாம்புகளின் தொல்லை அதிகமாக இந்தக் கிராமத்தில் இருக்கிறது. பாம்புகள், அடிக்கடி சிறுவர், முதியோர்களின் கால்களுக்குள் சிக்கிவிடுகின்றன. இதனால் நிம்மதியான வாழ்க்கையும் இல்லை; தூக்கம் கூட இல்லை என்ற நிலையில் வாழ்க்கை நகர்வதாக இவர்கள் சலித்துக்கொள்கின்றார்கள். இதனால், இந்த பிரதேசத்துக்கு சூரியமின்சக்தி தெருவிளக்குகளையாவது பொருத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்.



நஞ்சு பாம்புகளின் நடமாட்டம் உள்ள இந்த பிரதேசத்திலிருந்து அவசரத்துக்கு வைத்தியசாலைக்கு செல்லவேண்டுமாக இருந்தால் மணிக்கணக்கில் நேரம் எடுக்கும். பல கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அம்பாறை பொது வைத்தியசாலை, இறக்காமம் பிரதேச வைத்தியசாலை போன்றவற்றுக்குச் செல்ல வீதிகள் கூட முறையாக இல்லாத இந்த ஊரின் தலையெழுத்தை, யார் மாற்றியமைப்பார்கள்?

ஒரு முஸ்லிம் தனவந்தர் தன்னுடைய ஹஜ்ஜு கடமையை நிறைவேற்றும் பணத்தை கொண்டு, அந்தப் கடமைக்கு பகரமாக ஒரு குடும்பத்துக்கு 10 பேர்ஜஸ் என்ற கணக்கில் நன்கொடையாக வழங்கிய காணிகளைக் கொண்டே, இந்தக் கிராமம் உருவாக்கப்பட்டது. இருந்தாலும் அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத இந்தக் கிராமத்தை மேம்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.




கொரோனா சூழ்நிலை, பயணத்தடை போன்றவற்றால் இந்த மக்கள், முற்றாகத் தொழிலை இழந்திருந்தாலும் இதுவரை இந்த மக்களில் யாரும் கொரோனா தொற்றுக்குள்ளாக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வீணான உயிரிழப்புகள், சேதங்களின் பின்னர், தலையில் கைவைத்து ஒப்பாரி வைக்க முன்னர், இந்த மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை அவசரமாக எடுக்க, பொறுப்பில் உள்ளவர்கள் முன்வரவேண்டும்.



# கசந்த 'முத்தம்'



ஜே.ஏ. ஜோர்ஜ்
jantongeorge@gmail.com

'முத்தம்' தானே என்று, சாதாரணமாக நினைத்து விடாதீர்கள். அன்பு, நம்பிக்கை, நெகிழ்ச்சி என எல்லா வகையான உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கான அடிநாதமாக அமைவது முத்தம் தான்!

காதல், பாசம், மதிப்பு, நட்பு, கவலை என பல வகை உணர்ச்சிகளின் வெளிப்பாடாக முத்தம் அமைகிறது. உலகில் சில நாடுகளில், மூத்தமிடுதல் சடங்காகவும் உள்ளது. பெரும்பாலான மக்களின் பண்பாடுகளில், முத்தமிடுதல் முக்கிய பாரம்பரியமாகத் திகழ்ந்தாலும், இந்தப் பண்பாட்டை வழக்கமாகக் கொண்டிருக்காத மக்கள் கூட்டங்கள் பலவும் உலகத்தில் உள்ளன.

இலங்கை , இந்தியா போன்ற நாடுகளில் பொது இடங்களில் முத்தமிடுதல் ஆபாசமாகவும், கலாசார வரம்பு மீறலாகவும் கருதப்படுகிறது. முத்தமிடுதலை சாதாரண செயலாக ஏற்றுக்கொள்ள இந்த நாட்டு மக்களின் பண்பாடுகள் அனுமதிப்பதில்லை.

மத்திய கிழக்கு ஆசியா, ரஷ்யா, ஐரோப்பாவின் பல பகுதிகளில் வாழும் மக்களில், ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்கள் உதடுகள் உரசியோ, கன்னத்தில் முத்தமிட்டோ, தமது அன்பையும் மதிப்பையும் பறிமாறிக் கொள்வதற்கு, அவர்களது பண்பாடுகள் அனுமதிக்கின்றன. ஆனால், அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற ஆங்கில மொழி பேசும் நாடுகளில், ஒரே பாலினத்தவர்கள் உதடுகளில் முத்துமிடுதல், பாலியல் நோக்கம் சார்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

அதேவேளை, தாய் - தந்தை பிள்ளைகளுக்குக் கொடுக்கும் முத்தம், காதலன் - காதலிக்குக் கொடுக்கும் மூத்தம், கணவன் - மனைவிக்குக் கொடுக்கும் முத்தங்கள் இடம், சூழ்நிலை ஆகியவற்றுக்கு ஏற்ப, முத்தத்தின் அர்த்தங்களும் வேறுபடுகின்றன.

முத்தத்தால் சில நன்மைகளும் உண்டு என்கிறார்கள் விஞ்ஞானிகள். அதாவது, முத்தம் கொடுப்பதன் மூலம், நமது உடலில் கலோரிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைகிறது என்கிறார்கள்.

இது இப்படியிருக்க, கடந்த வாரங்களில் 'ஒரு முத்தம்', உலகம் முழுக்க பேசுபொருளாக மாறிய நிலையில், அந்த முத்தத்துக்கு சொந்தக்காரர், தனது பதவியையும் மனைவியையும் இழந்து தனித்து நிற்கின்றார். அவர் வேறு யாருமல்ல, பிரித்தானியாவின் முன்னாள் சுகாதார செயலாளர் மாட் ஹான்காக் என்பர்தான்.

பிரிட்டிஷ் சுகாதார செயலாளராக பதவி வகித்த மாட் ஹான்காக், தனது உதவியாளரான பெண்ணுடன், அலுவலகத்தில் நெருக்கமாக இருந்தமை அங்கிருந்த கண்காணிப்புக் கமெரா மூலம் தெரியவந்ததைத் தொடர்ந்து, அவர் பதவி விலகல் இடம்பெற்றிருக்கின்றது.

முத்தம் கொடுப்பது, அதுவும் ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்கள் முத்தம் கொடுப்பது, ஒரு குற்றமா என்று யாராவது நினைக்கலாம். எனினும், இங்குதான் இடம், பொருள், ஏவல் என, கொரோனா வைரஸ் தனது கைவரிசையைக் காட்டிவிட்டது.

யார் இந்த மாட் ஹான்காக் என்று கேட்பவர்களுக்கு, அவர் திருமணமானவர்; அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். அவர் பிரித்தானிய சுகாதார செயலாளராகப் பதவி வகித்தவர். தனது உதவியாளரான ஜினா கொலடங்கேலோவுடன் முத்தமிட்ட காட்சிகள் வெளிவரும் வரை, கொரோனா வைரஸுக்கு எதிராக, இங்கிலாந்தின் போராட்டத்திலும், தேசிய அளவிலான தடுப்பூசித் திட்டம் உள்ளிட்ட கொவிட்-19 பெருந் தொற்றுக்கு எதிராக முக்கிய திட்டங்களை வகுத்து, செயற்படுத்தும் இன்றைய காலகட்டத்தில் மிகமுக்கியமான பொறுப்புகளை நிர்வகித்து வந்தார் என்று சுருக்கமாகச் சொல்லாம்.







கொரோனா வைரஸ் தொற்றால், பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்து தவித்து, பெருந்தொற்றிலிருந்து மீண்டு வரும் முக்கிய தருணத்தில், அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய முக்கிய பதவியில் இருக்கும் ஒருவர், பிரிட்டஷ் சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் வைத்து, தனது உதவியாளரை அணைத்து (முத்து திரைப்பட பாணியில் 'இறுக்கி அணைச்சு ஒரு உம்மா தரு' என்பது போல) முத்தம் கொடுத்ததைப் பாரத்தால், ஐரோப்பிய நாட்டவர் முத்தம் கொடுத்தது ஒரு குற்றமா என்ற கேள்வி எழாது.

'தி சன்' என்ற பிரபல நாளிதழ், அது தொடர்பான புகைப்படங்கள், வீடியோவை வெளியிட்ட நிலையில், அந்தச் சம்பவத்தின்மூலம், கொரோனா வைரஸ் தொற்று விதிமுறைகளை மீறியதாக, மாட் ஹான்காக் மீது குற்றம் சுமத்தப்பட்டு, பூகம்பம் வெடிக்க ஆரம்பித்தது.

இந்த நூற்றாண்டில், ஆரோக்கியம் என்பது இங்கிலாந்தின் மிகப்பெரிய ஆர்வமாக இருக்கும் நேரத்தில், அந்நாட்டின் பேசுபொருளாக இந்தச் சம்பவம் அவரை முன்னிலைப்படுத்தி இருந்தது.

இந்தச் சர்ச்சையானது, ஹான்காக் அவரது திருமணமான உதவியாளரான ஜினா கொலடங்கெலோவை இறுக்கமாக அரவணைத்து, முத்தமிட்டதாக முதலில் கசிந்த சி.சி.டி.வி காட்சிகளில் ஆரம்பித்து, இறுதியாக ஜூன் 26 சனிக்கிழமை மாலை அவர் அமைச்சரவையில் இருந்து இராஜினாமா செய்தவுடன் ஓய்ந்தது. சஜித் ஜாவித், ஹான்காக்கின் இடத்தில் சுகாதார செயலாளராக இப்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படிக்கையில், சமகாலத்தவர்களாக இருந்த ஹான்காக்வுக்கும் கொலடாங்கெலோவுக்கும் தலா மூன்று குழந்தைகள் உள்ளனர்.

இங்கிலாந்து வரலாற்றில் மிக நீண்ட காலம் பணியாற்றிய சுகாதார செயலாளராக இருந்த ஜெர்மி ஹண்டின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, 42 வயதான ஹான்காக், 2018 முதல் அந்தப் பதவியில் இருந்தார். மேலும் அவர் 2010 முதல் எம்.பியாக இருந்து வருகிறார்.

ஹான்காக் 2006ஆம் ஆண்டில் மார்தா ஹோயர் மில்லர் என்பவரை மணந்தார். அவர்களுக்கு ஒரு மகள், இரண்டு மகன்கள் உள்ளனர். இந்த நிலையில், ஜூன் 24 வியாழக்கிழமை, ஹான்காக் தொடர்பில் வெளியான சி.சி.டி.வி காட்சிகள், அவர்களின் 15 ஆண்டுகால உறவுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன. இந்தச் சம்பவத்தை அடுத்து, அவரது மனைவி வீட்டை விட்டு வெளியேறிவிட்டார்.

இந்நிலையில், சர்ச்சையில் சிக்கியுள்ள கொலடாங்கெலோவுடன் அவர் இணைந்து வாழ வாய்ப்புள்ளது என்று, அவருக்கு நெருங்கிய நண்பர்கள் 'டைம்ஸ்' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளனர்.



இந்த விவகாரம் சூடுபிடித்த நிலையில், ஹான்காக் தனது செயல்களுக்காக மன்னிப்புக் கோரியிருந்தார். "இந்தச் சூழ்நிலைகளில் சமூக இடைவெளி வழிகாட்டலை மீறினேன் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் மக்களை வீழ்த்திவிட்டேன்; நான் மிகவும் வருந்துகிறேன்" என்று அவர் தெரிவித்திருந்தார்.

மக்களின் வரிப்பணத்தில் நபர்களை வேலைக்கு அமர்த்தி, அவர்களிடம் தகாத தொடர்புகளைப் பேணி, மக்களை ஏமாற்றியதாக அந்நாட்டு ஊடகங்கள் அவரைக் கடுமையாகச் சாடியிருந்தன. தெரிந்தோ, தெரியாமலோ அவர் கொடுத்த முத்தம், அவர் அறிந்தோ அறியாமலோ வெளியாகி, இன்று சர்சையாகிக் கிடக்கின்றது.

உலக நாடுகளில் முக்கிய பொறுப்பில் உள்ள இன்னும் எத்தனை பேர், என்னென்ன செய்கிறார்களோ? எல்லாம் அந்த முத்தத்துக்கே வெளிச்சம்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் சனிக்கிழமை, 3 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.